# இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்



## ஆண்டறிக்கை

# 2022

**உள்ளடக்கம்**

**பக்கம்**


- தவிசாளரின் செய்தி I-II

01. நிறுவனத்தின் தோற்றப்பாடு/ அமுல்படுத்துவதன் பொழிப்பு 1-3
02. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு 4-26
03. கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள் 27-34
04. நிருவாக அலுவல்கள் 35-37
05. பணிப்பாளர் சபை அறிக்கை 38-40
06. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 41-43
07. 2022 ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை 44-47
08. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தரகால நடவடிக்கைகள் 48-54
09. செயலாற்றுகை பற்றிய 05 வருடகால பொழிப்பு 55-57
10. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 58-73
11. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம 74-88
12. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்கல் செய்துகொள்ள மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் 89-115
13. 05 வருட கால கணக்குகளின் பொழிப்பு 116

## தவிசாளரின் செய்தி

உள்நாட்டு பெருந்தோட்டத்துறையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கி உள்நாட்டு மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தியை அறிமுகம் செய்து, மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மரமுந்திரிகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்து, தமது 50 ஆவது ஆண்டு நிறைடை எட்டியுள்ள இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2022 ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் இந்த சந்தர்ப்பத்தில் அதற்கான செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வடகிழக்கு பிரஸீலில் தோன்றிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை 16 ஆவது நூற்றாண்டில் இந்தியாவின் கோவா மாநிலம் ஊடாக போர்த்துக்கேயர்களினால் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இது இலங்கையின் வடமேல் கரையோர வலயத்தில் ஆரம்பத்தில் பயிர் செய்யப்பட்டதுடன், பிற்காலத்தில் உலர் காலநிலை நிலவுகின்ற வலயங்களில் கூடுதலாக பயிர்செய்யக்கூடிய பயிரொன்றாக பிரபல்யமடைந்தது. இன்று இது வணிக ரீதியில் மிக முக்கியத்துவம்வாய்ந்த உயர்மட்டப் விவசாய வாய்ப்புக்களைக் கொண்ட பயிரொன்றாக இதனை அறிமுகம் செய்ய முடியும்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் விவசாயத்துறையில் ஈடுபட்டவர்கள் மரமுந்திரிகை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதுடன், குறிப்பாக 1973 இல் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மரமுந்திரிகைக் கைத்தொழில் பிரபல்யமடைந்துள்ளது. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு மரமுந்திரிகைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது முக்கியமாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

தற்போது மரமுந்திரிகை பருப்பு மூலம் தயார் செய்யப்பட்ட உணவுகள், குறிப்பாக சிங்கள, தமிழ் புத்தாண்டு மற்றும் நத்தார் பண்டிகைக் காலத்தில் இனிப்புப் பண்டங்கள், கேக், உணவுக்குப் பயன்படுத்தப்படுவதுடன், மரமுந்திரிகை தோள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் திரவத்தை (Cashew nut liquid oil) அரக்கு, வண்ணப்பூச்சுக்கள், பிளாஸ்ரிக் உற்பத்திகளுக்கான மூலப் பொருளாக பயன்படுத்தும் ஆற்றலும் உள்ளது.

முந்திரிகைப் பருப்பு மற்றும் மரமுந்திரிகை உற்பத்திக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் பாரிய கேள்வி நிலவுகின்றது. இலங்கையின் முந்திரிகைப் பருப்பிலுள்ள யாணைத்தந்த நிறம், அளவில் பெரியதாக உள்ளமை, முந்திரிகை பருப்பை சுற்றியுள்ள இனிப்புமிக்க ஓரப்பகுதி காரணமாக உலக சந்தியல் பாரிய கேள்வி நிலவுவதுடன், மேற்படி கேள்வியை பூர்த்தி செய்வதற்குப் போதியளவு மரமுந்திரிகை உற்பத்தி இடம்பெறுவதில்லை. வருடாந்தம் தோளுடனான மரமுந்திரிகை சுமார் 25000 மெற்றிக் தொண் கேள்வி காணப்படுவதுடன், உற்பத்தி செய்யப்படுவது சுமார் 12000 மெற்றிக் தொண் மாத்திரமாகும். இந்த நிலைமை ஏற்றுமதியை மேம்படுத்துவதில் பாதகமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் தோளுடனான மரமுந்திரிகை அறுவடை 8225 மெற்றிக் தொண்கள் ஆகும் என்பதுடன், 2022 ஆம் ஆண்டில் இது 14730 மெ.தொ. ஆகும். இது இந்த ஆண்டில் உலகலாவிய ரீதியில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட பாரிய வெற்றியாகும். இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 79% ஆன வளர்ச்சியாகும். இந்த ஆண்டில் ஏற்றுமதியளவு மெ.தொ. 58.2 ஆகும் என்பதுடன், ஏற்றுமதிப் பெறுமதி ரூ.மி. 212.83 ஆகும். 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது உயர்மட்ட வளர்ச்சியாகும்.

2022 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சகல சேவைகளையும் வணிக நடவடிக்கைகளையும் மிக்க மகிழ்ச்சிகரமான மட்டத்தில் பேணிவர முடிந்ததுடன், அதற்காக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் எனது மனப்பூர்வமான நன்றிகளையும், கௌரவத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக கூட்டுத்தாபனத்தின் சகல செயற்பாடுகளையும் உச்சளவான விளைத்திறனுடனும், வினைத்திறன்மிக்கவாறும் பேணிவருவதற்காக பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர்கள் உள்ளிட்ட சகல பதவியணியினரும் கடும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதுடன், அவர்களின் சேவையையும் உயர்வாக மதிக்கின்றேன்.

சிறியளவிலான தயாரிப்பாளர்கள், மரமுந்திரிகை உற்பத்தி ஏற்றுமதியாளர்கள், மரமுந்திரிகை சிறு தோட்ட உரிமையாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட சகல தரப்பினர்களும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பேரில் இந்த வெற்றிகளை அடைந்துகொள்ள முடிந்ததுடன், இதனை மிக்க உயர்வாக மதிக்கின்றேன். பெருந்தோட்டத்துறை அமைச்சர் கௌரவ ரமேஷ் பத்திரண அவர்கள் உட்பட கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்டப் பயிர்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜானக வக்கும்புர அவர்கள் மற்றும் மேற்படி அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அமைச்சின் பதவியணியினர் எமது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய வழிகாட்டல்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சட்டத்தரணி சாரங்கா ரத்நாயக்க**
**தவிசாளர்**
**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்**

# 1. நிறுவனத்தின் தோற்றப்பாடு/ அமுல்படுத்துவதன் பொழிப்பு

## 1.1 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அமைத்துருவாக்கம்

விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1973 மே மாதம் 15 ஆம் திகதிய 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தாபிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம் முதல் அரச தொழில்முயற்சியொன்றாக இயங்கிவருவதுடன், மரமுந்திரிகைக் கைத்தொழிலுக்கு சகல சேவைகளையும் பெற்றுக் கொடுப்பதுடன், வணிக நடவடிக்கைகளையும் இலாபகரமான மட்டத்தில் மேற்கொள்கின்றது.

## 1.2 நோக்கு

மிக்க உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகையை உற்பத்தி செய்வதன் மூலம் இலங்கை உலகின் மரமுந்திரிகை ஏற்றுமதியில் முன்னோடி நாடாக மாறுதல்.

## 1.3 செயற்பணி

மரமுந்திரிகை செய்கை, உற்பத்தி, பதப்படுத்தல் தொழில்நுட்பம், பெறுமதி சேர்த்தல், ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொழில்சார் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நீண்டகால வர்த்தக ரீதியான வாய்ப்பை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் மரமுந்திரிகை கைத்தொழிலைக் கட்டியெழுப்புதல்.

## 1.4 இலக்கு மற்றும் நோக்கங்கள்

பூகோள ரீதியல் அங்கீகாரம் பெற்ற வர்த்தகப் பெயர் மற்றும் உயர்மட்ட ஏற்றுமதிக் கொள்ளளவுக்காக இலங்கையில் மரமுந்திரிகை உற்பத்தில் வியாபித்தல், பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தலின் விளைதிறனை மேம்படுத்தல்.

- பயிர்செய்கையை விஸ்தரிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரித்தல்.
- மரமுந்திரிகை பதப்படுத்தல் கைத்தொழில் மற்றும் தோட்டங்களின் விளைதிறனை மேம்படுத்தல்.
- இலங்கையின் மரமுந்திரிகைக்கு பூகோள ரீதில் அங்கீகாரம் பெற்றவர்த்தகப் பெயரை ஏற்படுத்தல்.
- பெறுமதி சேர்த்தல் மற்றும் புதிய உற்பத்தி அபிவிருத்தி.
- மரமுந்திரிகை ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

- இலங்கையை மரமுந்திரிப்பத்தியின் முன்னோடியாக மாற்றுதல்.
- இலாபம் உழைப்பதன் மூலம் தன்னிறைவடைந்த அரச கூட்டுத்தாபனமாக மாறுதல்.

**1.5 அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் முதலாவது அட்டவணைக்கு அமைய மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பணிகள்**

(அ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

(ஆ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் மற்றும் வேறு தகவல்களை சேகரித்தல், தயார் செய்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகம் மற்றும் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடன் இணைந்து செயற்படுதல்.

(உ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை பதனிடுவதற்காக தாபிக்கப்படுபின்ற தொழில்சாலைகளை தாபிக்க வேண்டிய இடங்கள், அவற்றின் அளவு மற்றும் தொழில்நுட்ப ரீதியான தரத்தை நிர்ணயித்தல் மற்றும் புதிய தொழில்சாலைகளைத் தாபிப்பதற்கும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அப்போது செயற்பட்டு வந்த தொழில்சாலைகளை இயங்கச் செய்தல்.

(ஊ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விநியோகம், விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்தல்.

(எ) மரமுந்திரிகை பயிர்செய்கை, பதனிடல், சந்தைப்படுத்தல், மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய

நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஆட்களைப் பயிற்றுவித்தலுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.

(ஏ) மரமுந்திரிகை பயிர்செய்கை, பதனிடல் வசதிகள் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் பணிக்குத் தேவையான அடிப்படை ஒழுங்கமைப்பைத் தாபித்தல் மற்றும் மேற்படி ஒழுங்கமைப்பை தாகிக்க உதவி வழங்குதல்.

(ஐ) மரமுந்திரிகை உற்பத்தியை பிரபல்யப்படுத்தல் மற்றும் விற்பனைக்குத் தேவையானதெனக் கருதப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உலக சந்தையில் குறித்த உற்பத்திகளுக்குள்ள கேள்வியை மேம்படுத்தல் மற்றும் அப்பணிக்கு அல்லது அது சம்பந்தமான பணிகளுக்கு பிரச்சார செயற்பாடுகளுக்கு நிதி செலவிடல், அந்நடவடிக்கைகளை உபநிருவகித்தல் மற்றும் அந்நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதை ஆரம்பித்து அதற்கு அனுசரணை வழங்குதல்.

## 2. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

### 2.1 பணிப்பாளர் சபை

**அட்டவணை 2.1 : 2022.01.01 திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரை**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | தீருமதி ஆர்.எஸ்.கே. ரத்நாயக்க | தவிசாளர் |
| 02. | செல்வி அசோகா லங்காதிலக்க | பிரதித் தவிசாளர் |
| 03. | திருமதி திலகா ஜயசுந்தர | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) 2022.01.01 முதல் 2022.01.31 வரை |
| 04. | திருமதி ஏ.யு.கே. தொடம்வல | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) 2022.06.06 முதல் 2022.12.31 வரை |
| 05. | செல்வி கே.ஏ.சீ. பிரியதர்ஷனீ | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி)2022.06.06 முதல் 2022.12.31 வரை |
| 06. | திரு சாமர சுபசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 07. | திரு உபாலி வடுஆரச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08. | திரு எச்.எம்.சீ.கே. ஹேரத் | பணிப்பாளர் சபை உறுப்பினர் 2022.01.01 முதல் 2022.01.31 வரை |
| 09. | திரு ஐ.டபிள்யு.ஏ. சமன் குமார | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10. | திரு பீ.பி. கொடிகார | பதில் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபையின் செயலாளர் (2022.01.01 முதல் 2022.08.15 வரை) |
| 11. | திரு கே.எஸ். விஜயகீர்த்தி | பதில் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபையின் செயலாளர் (2022.09.06 முதல்) |

2.2 **இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

**அட்டவணை 2.2 : 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | செல்வி கே.ஏ.சீ. பிரியதர்ஷனீ | குழுவின் தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி |
| 02. | திருமதி ஏ.யு.கே. தொடம்வல | குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) |
| 03. | திரு சாமர சுபசிங்க | குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 04. | திரு பீ.பி. கொடிகார | குழுவின் செயலாளர், (பதில்), பொது முகாமையாளர் (பதில்) (2022.01.01 திகதி முதல் 2022.08.15 திகதி வரை) |
| 05. | திரு கே.எஸ். விஜயகீர்த்தி | குழுவின் செயலாளர், (பதில்), பொது முகாமையாளர் (பதில்) (2022.09.02 திகதி முதல் 2022.12.31 திகதி வரை) |
| 06. | திரு வீ.யூ. லியனகே | குழுவின் ஏற்பாட்டாளர் மற்றும் குழு உறுப்பினர், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) |
| 07. | திரு ஆர்.எம்.பீ.ஏ. ஜானக | கணக்காய்வு அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம் (2022.01.01 திகதி முதல் 2022.11.16 திகதி வரை) |
| 08. | திருமதி ஜீ.கே.யு. அபேரத்ன | கணக்காய்வு அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம் (2022.12.29 திகதி முதல் 2022.12.31 திகதி வரை) |

2.3 **இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்ட முகாமைத்துவம்**

i). திரு பீ.பி. கொடிகார - பிரதிப் பொது முகாமையாளர் /பதில் பொது முகாமையாளர் (2022.01.01 முதல் 2022.08.15 வரை)

ii). திரு கே.எஸ். விஜயகீர்த்தி - பதில் பொது முகாமையாளர் (2022.08.16 முதல்)

## 2.4 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நடுத்தர மட்ட முகாமைத்துவ பதவியணி

| | | | |
|---|---|---|---|
| i) | திரு எம்.ரீ.எஸ்.கே. பீரிஸ் | - | உதவிப் பொது முகாமையாளர் - நிதி |
| ii) | திரு ஜீ.பி.பி. சுரேந்திர | - | உதவிப் பொது முகாமையாளர் - விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி |
| iii) | திரு வீ.யு. லியனகே | - | உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வாளர் |
| iv) | திரு ஆர்.எம்.பீ. ஜயதிஸ்ஸ | - | உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் |
| v) | திரு பீ.எம்.ஏ.பீ.கே. விஜேதுங்க | | உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் |

## 2.5 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 07 பிரிவுகள் காணப்படுவதுடன், மேற்படி ஒவ்வொரு பிரிவுகளும் மற்றும் மேற்படி ஒவ்வொரு பிரிவுகளினதும் செயற்பணிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

01. விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
02. நிருவாகப் பிரிவு
03. நிதிப் பிரிவு
04. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
05. பெருந்தோட்டப் பிரிவு
06. சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவு
07. கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

### 2.5.1 விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மரமுந்திரிகைக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கு பொறுப்புக்கூறும் பாரிய வகிபாகத்தை நிறைவேற்றி வருகின்றது. இதன் போது குறிப்பாக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மரமுந்திரிகை பயிர்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் முக்கியதொரு செயற்பணி ஆற்றப்பட்டு வருகின்றது.

#### 2.5.1.1 விஸ்தரித்தல் பிரிவு

விஸ்தரித்தல் பிரிவின் பணிகளை பின்வருமாறு பொழிப்புரையாகக் குறிப்பிட முடியும்.

- மரமுந்திரிகை விவசாயிகளின் பயிற்சித் தேவைகளை இனங்காணல்.
- நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதும், அமுல்படுத்துவதும்.
- மரமுந்திரிகை பயிர்செய்கையில் உயர் மட்ட முறைகளை காட்சிப்படுத்தல்.
- விவசாயிகள் எதிர்கொள்ளும் துறைசார் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குதல்.
- துறைசார் முன்மாதிரிகள் மற்றும் காட்சிப்படுத்தல் அம்சங்களைத் தாபித்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல்.
- ஏனைய விவசாய நீண்டகால சேவைசார் மற்றும் அமைப்புக்களுடன் ஒத்துழைப்பைப் பேணி நடவடிக்கை மேற்கொள்ளல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கை முறைகள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மூலம் ஆற்றப்பட்டு வருகின்ற விஸ்தரித்தல் சேவைகளின் (Extension Services) கீழ் மரமுந்திரிகை பயிர்செய்யும் விவசாயிகளின் திறமைகள், அறிவு மற்றும் அனுபவங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு மற்றும் மரமுந்திரிகை பயிர்செய்கையின் உற்பத்தி மற்றும் விளைச்சலை அதிகரித்துக் கொள்ளத் தேவையான தொழில்நுட்ப மற்றும் செயன்முறைப் அறிவு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

**விஸ்தரித்தல் பிரிவின் நோக்கங்களைப் பின்வருமாறு பொழிப்புரையாகக் குறிப்பிட முடியும்.**

- விவசாயிகளுக்கு மத்தியில் மரமுந்திரிகை பயிர்செய்கை முறைகளின் பொதுவான நிலைமைகளை அறிமுகம் செய்து அவற்றை அபிவிருத்தி செய்தல்.
- மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் விளைச்சலை வளர்த்தல்.
- ஆராய்ச்சிப் பெறுபேறுகள் மற்றும் சிறந்த முறையியல்களை பயிர்செய்கையாளர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தல்.
- விவசாயிகளின் திறமைகள் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குவதும், ஒத்துழைப்பை வழங்குவதும்.
- நிலைபேறான மற்றும் சுற்றாடலுக்கு சாதகமான மரமுந்திரிகை பயிர்செய்கை முறைகளை மேம்படுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வசதிகளை செய்துகொடுத்தல்.
- ஆராய்ச்சி, நீண்டகால நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான தொடர்பை வளர்த்தல்.

இலங்கையில் விஸ்தரித்தல் பிரிவின் கீழ் 11 பிராந்திய விஸ்தரித்தல் அலுவலகங்கள் கிளிநொச்சி, அநுராதபுரம், திருகோணமலை, புத்தளம், மாத்தளை, மஹியங்கனை, அம்பாறை, மட்டக்களப்பு, மொனராகலை, ஹம்பாந்தோட்டை மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், மரமுந்திரிகை பயிர்செய்கையாளர்களுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுப்பது இவற்றின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கையின் உலர் வலயங்களை முக்கியமாக உள்ளடக்கியதாக இந்த அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இடைப்பட்ட மற்றும் ஈர வலயங்களை உள்ளடக்கியதாகவும் இந்த அலுவலகங்களின் கடமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புத்தளம், குருநாகல், கம்பஹா, கேகாலை, அநுதாரபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, மாத்தளை, மகியங்கனை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மரமுந்திரிகை செய்கையை தாபிப்பதற்கு பிரதானமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த அலுவலங்களின் கண்காணிப்புப் பணிகளை உதவிப் பொது முகாமையாளர் (விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி) மேற்கொண்டு வருகின்றார். இப்பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பிராந்திய முகாமையாளர், உதவிப் பிராந்திய முகாமையாளர் உள்ளடங்களாக சுமார் 1009 பேர் கொண்ட வெளிக்கள பதவியணியினர் மூலம் பின்வரும் வகிபாகங்களை பிரதானமாகக் கொண்டு சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான மரமுந்திரிகை பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் திறமைகள், அறிவு மற்றும் அனுபவங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும், மரமுந்திரிகை செய்கையின் உற்பத்தி மற்றும் விளைச்சலை அதிகரித்துக் கொள்ளவும் தேவையான தொழில்நுட்ப மற்றும் செயன்முறை உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**விஸ்தரித்தல் பிரிவின் வகிபாகம் பின்வருமாறாகும்.**

- மரமுந்திரிகை விவசாயிகளின் பயிர் நிலங்களுக்கான வெளிக்கள விஜயங்களை அமுல்படுத்தல்.
- விவசாயிகளுக்கு பயிற்சி அமர்வுகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.
- மரமுந்திரிகை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

- ஆராய்ச்சி அலகின் ஒத்துழைப்புடன் அறிவு மற்றும் புத்தாக்கத் துறைக்கு மாற்றம் செய்தல்.
- நீண்டகால சுற்றாடல் நடவடிக்கைகளின் மூலம் மரமுந்திரிகை செய்கையின் தாக்கங்களை அவதானிப்புச் செய்வதும், மதிப்பீடு செய்வதும்.
- வளங்கள், கருவிகள், வழிகாட்டல்கள், ஆவணங்கள் மற்றும் செய்திகளை அபிவிருத்தி செய்தல்.
- தரமான மரமுந்திரிகை கன்றுகளை பராமரிப்புச் செய்வதற்கு விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.

இதற்கு மேலதிகமாக நீண்டகால சேவைகள், சமகால மற்றும் வினைத்திறன்மிக்க சேவைகளை ஆற்றுதல், நீண்டகால நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளுடனான மதிப்பீடுகளின் சரியான அறிக்கைகளை பேணிவருதல், விவசாயிகளுக்கு நவீன மற்றும் நடைமுறை தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், நீண்டகால நடவடிக்கைகளுக்கு விவசாயிகள் சங்கங்களைத் தாபித்தல் மற்றும் அவற்றுடன் இணைந்து செயற்படுதல், நீண்டகால நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் சவால்களை முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடல், நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளங்கள் மற்றும் நிதியைப் பெற்றுக் கொள்வதும், தொழில்சார் அபிவிருத்தி மற்றும் பயிற்சியின் மூலம் அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தல் போன்றன விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்புக்கள் எனக் குறிப்பிட முடியும்.

### 2.5.1.2 **ஆராய்ச்சிப் பிரிவு**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் மரமுந்திரிகை செடி, மரமுந்திரிகை செய்கை மற்றும் உற்பத்திகள் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் பிரதானமாக இரண்டு நிலையங்கள் புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. அதாவது புத்தளம் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கமன்தலுவ ஆராய்ச்சி நிலையம் ஆகியன அவையாகும்.
இலங்கை மரமுந்திரிகை கைத்தொழிலின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் மற்றும் நிலைபேறான, சுற்றாடலுக்கு சாதகமான முறையியல்களை மேமபடுத்துவது ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும் என்பதுடன், ஏனைய நோக்கங்கள் கீழே பொழிப்புரையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- மரமுந்திரிகை பயிர்களின் தரம் மற்றும் விளைச்சலை மேம்படுத்தல்.
- நிலைபேறான மற்றும் வினைத்திறன்மிக்க மரமுந்திரிகை பயிர் முறையை அபிவிருத்தி செய்தல்.

- மரமுந்திரிகை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை நவீனமயப்படுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சுக்கள் மற்றும் நோய்களுக்கு எதிரான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- இலங்கையில் மரமுந்திரிகை கைத்தொழிலின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கையில் நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை மேம்படுத்தல்.
- ஆராய்ச்சிப் பெறுபேறுகளை விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தல்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் பிரதான பணியாக இருப்பது மரமுந்திரிகை பயிர்செய்கையின் தரம் மற்றும் விளைச்சலை மேம்படுத்துவதற்கான நிலைபேறான, வினைத்திறன்மிக்க பயிர்செய்கை முறைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை செய்கைக்குத் தேவையான நவீன தொழில்நுட்பப் பிரேரணைகளை மேம்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இப்பணிகளுக்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் ஆராய்ச்சிப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

- மரமுந்திரிகை மரங்களின் வெளிக்களப் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு நிலம், நீர் மற்றும் செடி வகைகளை பகுப்பாய்வு செய்தல்.
- பூச்சு வகைகள் மற்றும் நோய் முகாமைத்துவ முறைகளை அபிவிருத்தி செய்தல்.
- பல்வேறு பயிர் செய்கை முறைகளினதும் வினைத்திறனை மதிப்பீடு செய்தல்.
- மரமுந்திரிகை வகைகளின் உயிரியல் சமூகத்தை இணைத்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல்.
- மரமுந்திரிகை உற்பத்தி முறைகளின் பொருளாதாரப் பயன்களை மதிப்பீடு செய்தல்.
- மரமுந்திரிகை செடிகள் பயிரிடப்பட்டதன் பின்னர் பராமரிப்புச் செய்யும் முறைகளை நவீனமயப்படுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கையாளர்கள் மற்றும் பதனிடுவோருக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

இதற்கு மேலதிகமாக இப்பிரிவினால் மரமுந்திரிகை மரங்களிலிருந்து மேலதிக பெறுமதிகளைக் கொண்ட உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல், மரமுந்திரிகை மரங்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் கிருமிகள் மற்றும் நோய்களுக்கு எதிரான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் ஒரு வகிபாகம் என்ற வகையில் மரமுந்திரிகை செய்கை மற்றும் தயாரிப்பு பற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பைப் பேணி நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மரமுந்திரிகை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் என்ற வகையில் அறிமுகம் செய்ய முடியும் என்பதுடன், குறித்த பயிரிடல் முறையியல்களின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆராய்ச்சிப் பெறுபேறுகளை விஞ்ஞான ரீதியான சஞ்சிகைகள் மற்றும் ஆவணங்கள், அறிக்கைகள் என்ற வகையில் பிரசுரிக்கப்படுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆராய்ச்சித் தரவுகளின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மையைப் பாதுகாத்தல், சட்ட ரீதியான வழிகாட்டல்கள் மற்றும் தொழில்சார் நியமங்களைப் பின்பற்றல், ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் மற்றும் பெறுபேறுகளின் பூரண அறிக்கைகளைப் பேணிவருதல், மரமுந்திரிகை கைத்தொழிலின் தரப்பினர்களுடனான ஒத்துழைப்பை மேம்படுத்தல், ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் மற்றும் பெறுபேறுகளை இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடல், ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி மற்றும் வளங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் தொழில்சார் அபிவிருத்தியினூடாக அறிவையும், திறமைகளையும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தல் போன்ற பணிகளை ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்புக்களாக குறிப்பிட முடியும்.

ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துவதற்காக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனமும், வடமேல் பல்கலைக் கழகத்தின் விவசாயப் பீடமும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு இவ்வாறு கூட்டாக தாபிக்கப்பட்டுள்ள குழு ஆகும் என்பதுடன், இதன் உறுப்பினர்கள் மூலம் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிப்படுத்தல் மற்றும் திசைமுகப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.5.2 மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிருவாகப் பிரிவு

ஒரு நிறுவனத்தின் மனிதவளமாக மனிதன் மற்றும் விளைதிறன்மிக்க உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடிய அவர்களுக்கு உரித்தான பலம், அறிவு, திறமை மற்றும் அனுபவங்களைக் குறிப்பிட முடியும்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபதன்தின் குறிக்கோள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித வளங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதை மனித வளம் மற்றும் நிரவாகப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகளாகக் குறிப்பிட முடியும்.

இப்பணிகளுக்கு மேலதிகமாக மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவினால் பின்வரும் பயன்களும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது..

- விவசாயிகள், பதனிடுவோர், சந்தைப்படுத்துவோர் மற்றும் அபாயங்களைத் தாங்கிக் கொள்பவர்களுக்கு சேவைகளை ஆற்றி கூட்டுத்தாபனத்தின் பணிகளின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதன் மூலம் இலாபத்தை மேம்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் பதவியணியினருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து பதவியணியினரின் வினைத்திறனை மேம்படுத்தல்.
- நிருவாக ஒழுங்குவிதிகளை தயார் செய்தல்.

### 2.5.3 நிதிப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பிரிவினால் பல்வேறு துறைகளுக்கும் தேவையான நிதி வசதிகளைச் செய்துகொடுக்கும் பொறுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய வரவு செலவுத்திட்டம் மற்றும் நிதிச் செயற்பாட்டுத் திட்டங்களுக்கு இணங்கிய அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கான நிதி வசதிகளைச் செய்துகொடுப்பது தொடர்பாக நிதிப் பிரிவு பொறுப்பைக் கொண்டுள்ளது. நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் பின்வருமாறாகும்.

- சரியான நிதி முகாமைத்துவத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனையும், விளைதிறனையும் மேம்படுத்தல்.
- குறித்த நிதிசார் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
- பல்வேறு பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்களின் வருமானம், செலவினம், இலாபம் மற்றும் நட்ட நிலைமைகளைக் குறிப்பிட்டு மாதாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.
- ஒவ்வொரு வருட இறுதியிலும் வணிக மற்றும் சேவைசார் துறைகளின் இலாபங்களைக் குறிப்பிட்டு இறுதிக் கணக்குகளைத் தயார் செய்து அமைச்சிடம் சமர்ப்பித்தல்.

## 2.5.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு .

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயற்பாடுகளின் அடிப்படையிலான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி அடிக்கடி மற்றும் சுயாதீனமான மதிப்பீட்டை மேற்கொண்டு, அதனூடாக ஏற்புடையதாகின்ற உள்ளகப் பரிசோதனைகளின் போதியளவிலான தன்மை மற்றும் செல்லுபடியான தன்மையை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வளங்களை முறையான கட்டுப்பாட்டின் கீழ் மென்மேலும் விளைதிறனும், வினைத்திறனும்மிக்கதாகவும் மற்றும் பொருளாதார ரீதியில் நிறுவனத்தின் அன்றாட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பல்வேறு முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் அவற்றின் செயன்முறை உபயோகம் பற்றி பின்னூட்டல் மற்றும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு ஏற்புடையதாகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் தொடர்ச்சியான மதிப்பீட்டை மேற்கொள்ளல் மற்றும் அவற்றில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றி நிருவாக அதிகாரசபைக்கு அறிக்கையிடல் ஆகிய பணிகளின் அடிப்படையில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பொது இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பங்களிப்பு வழங்குவது இந்தக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

இதற்கு மேலதிகமாக, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உப நோக்கங்கள் பின்வருமாறாகும்.

- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் மற்றும் நிதி அல்லாத செயற்பாடுகளுக்கு சுயாதீனமான உறுதிப்படுத்தல் மற்றும் உள்ளக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் நியாயமான மற்றும் போதியளவிலான தன்மையை தாபிப்பதற்கு உள்ளகப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் ஊழல், மோசடி மற்றும் தவறவிடுதல்களை வெளிப்படுத்திக் கொள்ளல்.

- முறையான உபாயமுறைகள் மற்றும் முறையான முறையியல்களின் பயன்பாடு மற்றும் வளங்களை விளைதிறனும், வினைத்திறனும்மிக்க பொருறாதார முறைகளைப் பயன்படுத்தி நல்லதொரு கட்டுப்பாடு மற்றும் நோக்கங்களுடன் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்தை நோக்காகக் கொள்வதை ஆரம்பிப்பது சம்பந்தமான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி நீண்டகால உறுதிப்படுத்தல்களை மேற்கொள்வதன் மூலம் முன்னேற்றத்தை உறுதி செய்தல்.

## 2.5.5 பெருந்தோட்டப் பிரிவு

இலங்கையின் உள்நாட்டு மரமுந்திரிகை நுகர்வுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யத் தேவையான உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகையை உற்பத்தி செய்வதன் மூலம் மரமுந்திரிகை கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவு மூலம் பாரியதொரு செயற்பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதன் போது மரமுந்திரிகை ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு மரமுந்திரிகை செய்கையில் பிரவேசிக்கும் பாரியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு மரமுந்திரிகை செய்கைக்குத் தேவையான உயர் தரத்தைக் கொண்டு நட்டும் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல், தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பது பெருந்தோட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய பணிகளாகும்.

இலங்கையில் தற்போது 22 மாவட்டங்களில் மரமுந்திரிகை செய்கை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பயிர்செய்கையாளர்கள் மேற்படி மரமுந்திரிகை செய்கையை சிறியளவில் மற்றும் பாரியளவில் என்ற வகையில் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதுடன், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவு மூலம் குறித்த மரமுந்திரிகை செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அவர்களின் மரமுந்திரிகை செய்கையை தரமாகவும், இலாபகரமாகவும், வெற்றிகரமாகவும் பேணிவரத் தேவையான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணியை பின்வருமாறு பொழிப்புரையாகக் குறிப்பிட முடியும்.**

- கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளைப் பராமரிப்புச் செய்து இலாபகரமான முறையில் பேணிவருதல்.
- மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த முடிவு மரமுந்திரிகைத் தேவைக்கு அவசியமான தோளுடனான மரமுந்திரிகையை உற்பத்தி செய்தல்.
- தோட்டங்களில் புதிய பயிர்செய்கையை ஏற்படுத்தல் மற்றும் பழைய பயிர்செய்கைகளை மறுசீரமைப்புச் செய்தல்.
- வணிக நாற்று மேடைகளை வருடாந்தம் தாபித்து பயிர்செய்கைப் பொருளாக உண்மையான (Authentic) ஒட்டுச் செடிகள் மற்றும் நாற்றுச் செடிகளை உற்பத்தி செய்தல்.

- இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளை மையமாகக் கொண்டு கிராமப் புறங்களில் வாழும் மக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு உற்பத்தியின் தரம் மற்றும் அளவை மேம்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.

- மரமுந்திரிகை செய்கையை மாதிரி பயிர்செய்கையாக பேணிவருவதுடன், முதலீட்டாளர்கள் மற்றும் பதனிடுவோரை ஈர்த்தல்.

- பயிர் செய்கையாளர்கள், புதிய தொழில்முயற்சியாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு மரமுந்திரிகை கைத்தொழில் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவின் கீழ் 08 தோட்டங்கள் மற்றும் 05 பயிர்செய்கைப் பொருட்கள் நிலையங்களும் (Planting Material Production Centers) நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவினால் மரமுந்திரிகை செய்கையை விஸ்தரிப்பதற்குத் தேவையான உண்மையான (Authentic) ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதிலும் மரமுந்திரிகை பயிர் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.5.6 சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவு

சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவினால் உள்நாட்டு மரமுந்திரிகை நுகர்வுக்குத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தரமான மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 02 நிலையங்கள் காணப்படுகின்றன. சந்தைப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணிகளை பின்வருமாறு பொழிப்புரையாகக் குறிப்பிட முடியும்.

- உற்பத்திச் செலவினத்தைக் குறைத்தல், விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழிலை மேம்படுத்தல்.

- சர்வதேச தரநியமங்களுக்கு பொருத்தமானவாறு பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தியாளர்களின் தரம் மற்றும் சுவையை மேம்படுத்தல்.

- மரமுந்திரிகை சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுடன் சிறந்த தொடர்பைப் பேணி வருவதுடன் வருடாந்தம் அபிவிருத்தியை மேற்படி துறையில் ஏற்படுத்தல்.

- இலாபகரமான தன்மையை மேம்படுத்தி மற்றும் சந்தையில் போட்டியாளர்களுடன் நல்லதொரு உறவைப் பேணி, சந்தைப்படுத்தல் பிரிவை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் பேணிவருதல்.

- ஊழியர்களின் அறிவை இற்றைப்படுத்தல், திறமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், பலப்படுத்துவதும்.

### 2.5.7 கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

- கூட்டுத் திட்டம் மற்றும் செயற்றிட்டத்தை வருடாந்தம் தயார் செய்தல்.

- கூட்டுத் திட்டம் மற்றும் செயற்றிட்டம் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உண்மைச் செயற்பாடுகளுடன் ஒப்பிடு செய்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உயர் முகாமைத்துவம், பணிப்பாளர் சபை மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு அறிவித்தல் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள தடைகளுக்கான தீர்வுகளை கண்டறிதல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், செயலாற்றுகை மற்றும் சிக்கல்களை அறிக்கையிடல்.

- மரமுந்திரிகை விவசாயிகள் மற்றும் பதனிடுவோரின் செயற்பாடுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சகல வணிகப் பணிகள் தொடர்பிலுமான தரவுக் களஞ்சியமொன்றை பேணிவருதல்.

- இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள தடைகளை இனங்காணல், அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், கூட்டுத்தாபனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகொள்வதற்கான திட்டங்களை குறைந்த செலவில் மேற்கொள்ளல்.

- மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ளும் வெற்றிகள் மற்றும் நன்மதிப்பை மேம்படுத்தல், மரமுந்திரிகை செய்கையின் பயன்களை மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 2.6 தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்

### 2.6.1 தலைமை அலுவலகம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் இலக்கம் 1334, பழைய கோட்டே வீதி, ராஜகிறிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**<u>தொலைபேசி இலக்கம் :</u>**

| | | |
|---|---|---|
| தவிசாளர் | - | 0112 - 871005 |
| பிரதித் தவிசாளர் | - | 0112 - 869844 |
| பொது முகாமையாளர் | - | 0112 - 876134 |
| பெக்ஸ் | - | 0112 - 867843 |
| மின்னஞ்சல் | - | cashewco@sltnet.lk |
| இணையத்தளம் | - | www.cashew.gov.lk |

### 2.6.2 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பிராந்திய அலுவலகங்கள், தோட்டங்கள், நட்டுப் பொருள் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பதனிடல் அலகுகள்

#### 2.6.2.1 பிராந்திய அலுவலகங்கள்

அட்டவணை **2.6.2.1 :** பிராந்திய அலுவலகங்கள்

| | பெயரும், பதவியும் | உள்ளடங்கும் மாவட்டம் | அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி சீ.ஏ. தெனகம பிராந்திய முகாமையாளர் (பதில்) | அநுராதபுரம் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம், கொடகே மாவத்தை, அநுராதபுரம் | 025-2227071<br>071-8046790 |
| 2. | திரு புத்திக்க சந்தருவன், உதவிப் பிராந்திய முகாமையாளர் | பதுளை/கண்டி | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், சீ.ரீ.சீ. சந்தி, அளுத்தரம, மஹியங்கனை | 055-3555257<br>077-3410225 |
| 3. | திரு ரஞ்ஜித் கமகே, உதவிப் பிராந்திய முகாமையாளர் (பதில்) | ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், மத்திய நாற்றுமேடை கிரலவெல்கொட்டுவ, எம்பிலிபிட்டிய | 077-6263358 |
| 4. | திரு எல். சஞ்ஜீவன், உதவிப் பிராந்திய முகாமையாளர் | கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ யாழ்ப்பாணம்/ வவுனியா/ மன்னார் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பழைய கச்சேரிக் கட்டிடம், கிளிநொச்சி | 021-2283830<br>077-9850497 |
| 5. | திரு புத்திக்க சந்தருவன் உதவிப் பிராந்திய முகாமையாளர் | அம்பாறை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், 40 ஆம் மைல் கல், மங்களகம, அம்பாறை | 077-3410225 |

| | பெயரும், பதவியும் | உள்ளடங்கும் மாவட்டம் | அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| 6. | திரு கே.ஏ.ஏ.என். அமரசிங்க, உதவிப் பிராந்திய முகாமையாளர் | மொனராகலை | ஹோமாகமவத்த, 22 ஆம் மைல் கல், நக்கல, மொனராகலை | 055-2252090<br>071-8159195 |
| 7. | திரு கே.பீ.எஸ். ஜே. காரியவசம், உதவிப் பிராந்திய முகாமையாளர் | ஹம்பாந்தோட்டை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், சில்வாஸ், மல்பெத்தாவ, அம்பலாந்தோட்டை | 071-8576359 |
| 8. | திரு எச்.எம்.ஏ.எஸ். ஜயவர்த்தன, உதவிப் பிராந்திய முகாமையாளர் | புத்தளம் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், புனிதமரியாள் வீதி, சேனகுதிரிப்பு, புத்தளம் | 032-2265998<br>070-3324319 |
| 9. | திரு எச்.ரீ.டி. தயாரத்ன, உதவிப் பிராந்திய முகாமையாளர் | மட்டக்களப்பு/ பொலன்னறுவை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பொது நூலகம், வீ.சீ. வீதி, வந்துரமூலை | 077-6181734 |
| 10. | திரு கே.டி. மதுசங்க, நிலையப் பொறுப்பு அலுவலர் | மாத்தளை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், நாலந்தா விதை பூங்கா, மடவல, உல்பத்த, மாத்தளை | 071-0144631 |
| 11. | திரு ஆர்.எஸ். நரேஷ் குமார், நிலையப் பொறுப்பு அலுவலர் | திருகோணமலை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், கண்டி வீதி, தம்பலகாமம், திருகோணமலை | 077-1303648 |

### 2.6.2.2 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்கள்

**அட்டவணை 2.6.2.2: தோட்டங்கள் மற்றும் காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | தோட்டத்தின் பெயர் | அமைந்துள்ள மாவட்டம் | மொத்த ஏக்கர் அளவு | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|
| 01. | கமன்தலுவ தோட்டம் | புத்தளம் | 548 | 494 |
| 02. | ஆச்சிகெவத்த தோட்டம் | புத்தளம் | 961 | 761 |
| 03. | ஹாடி தோட்டம் | மட்டக்களப்பு | 365 | 190 |
| 04. | கொண்டச்சி தோட்டம் | மன்னார் | 6498 | 2385 |
| 05. | மாங்கேணி தோட்டம் | மட்டக்களப்பு | 1075 | 115 |
| 06. | பூநகரி தோட்டம் | கிளிநொச்சி | 479 | 479 |
| 07. | வெல்லன்குள் தோட்டம் | மன்னார் | 500 | 265 |
| 08. | திரியாய தோட்டம் | திருகோணமலை | 10 | 10 |
| | **மொத்தம்** | | **10436** | **4699** |

### 2.6.2.3 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான விதைத் தோட்டங்கள்

**அட்டவணை 2.6.2.3: விதை தோட்டங்கள் அமைந்துள்ள காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | விதைத் தோட்டத்தின் பெயர் | அமைந்துள்ள மாவட்டம் | மொத்த ஏக்கர் அளவு | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|
| 01. | எழுவன்குளம் விதைத் தோட்டம் | புத்தளம் | 651 | 245 |
| 02. | விளச்சிய விதைத் தோட்டம் | அநுராதபுரம் | 25 | 17 |
| 03. | சுதுவத்துர விதைத் தோட்டம் | மொனராகலை | 200 | 45 |
| 04. | மஹஓயா விதைத் தோட்டம் | அம்பாறை | 81 | 45 |
| 05. | நாலந்தா விதைத் தோட்டம் | மாத்தளை | 135 | 50 |
| | **மொத்தம்** | | **1092** | **402** |

**புகைப் படம் 2.6.2.3. : நாலந்தா விதைத் தோட்டம் - மாத்தளை மாவட்டம்**



### 2.6.2.4 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நாற்றுமேடை

**அட்டவணை 2.6.2.4: நாற்றுமேடைகள் அமைந்துள்ள காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | மத்திய நாற்றுமேடையின் பெயர் | உள்ளடங்கும் மாவட்டங்கள் | ஏக்கர் | செடி உற்பத்திக் கொள்ளளவு (செடிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 01. | மிகிந்தலை நாற்றுமேடை | அநுராதபுரம் /வவுனியா/ கிளிநொச்சி/முல்லைத்தீவு/ மன்னார் | 2.5 | 160000 |
| 02. | தம்புளை நாற்றுமேடை | மாத்தளை/ பொலன்னறுவை | 3.0 | 50000 |
| 03. | கமன்தலுவ நாற்றுமேடை | புத்தளம்/ குருநாகல் | 1.0 | 240000 |
| 04. | ஹாதி நாற்றுமேடை | மட்டக்களப்பு/ திருகோணமலை | 1.0 | 40000 |
| 05. | கும்புக்கன நாற்றுமேடை | மொனராகலை | 3.0 | 150000 |
| 06. | மகியங்கனை நாற்றுமேடை | பதுளை/ கண்டி | 2.0 | 60000 |
| 07. | சாந்திரிக்கா வாவி நாற்றுமேடை | ஹம்பாந்தோட்டை /இரத்தினபுரி | 0.5 | 60000 |
| 08. | *மங்கலகம* | அம்பாறை | 0.25 | 15000 |
| **மொத்தம்** | | | **13.25** | **775000** |

## 2.6.2.5 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பதனிடல் நிலையங்கள்



| தொடர் இல. | பதனிடல் நிலையம் | மாவட்டம் |
|---|---|---|
| 01. | நெந்தகமுவ பதனிடல் நிலையம் | கம்பஹா |
| 02. | புத்தளம் பதனிடல் நிலையம் | புத்தளம் |

புகைப்படம் 2.6.2.5 - நெந்தகமுவ பதனிடல் நிலையம்





## 2.6.2.6 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆராய்ச்சி அலகுகள்

அட்டவணை 2.6.2.6 : இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆராய்ச்சி அலகுகள்

| தொடர் இல. | ஆராய்ச்சி அலகு | மாவட்டம் |
|---|---|---|
| 01. | கமன்தலுவ ஆராய்ச்சி அலகு | புத்தளம் |
| 02. | புத்தளம் ஆராய்ச்சி அலகு | புத்தளம் |

## 2.6.2.7 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பிரதான கூட்டு ஆராய்ச்சி ஒத்துழைப்பு

வடமேல் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்தம் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் மரமுந்திரிகை

பயிர்செய்கையின் தரம் மற்றும் விளைச்சலை மேம்படுத்தல், நிலைபேறான மற்றும் வினைத்திறன்மிக்க மரமுந்திரிகை பயிர்செய்கை முறைகளின் அபிவிருத்தி, மரமுந்திரிகை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் மரமுந்திரிகை சார்ந்த உற்பத்திகளை நவீனமயப்படுத்தல், மரமுந்திரிகை செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சுக்கள் மற்றும் நோய்களுக்கு எதிரான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆற்றல் கிடைக்கின்றது. 2022 ஆம் ஆண்டு பல்லாண்டு தொடர்ச்சியான தன்மையைப் பேணிவருவதுடன் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.6.7.8 **இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள்**

**அட்டவணை 2.6.2.8 : இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள்**

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 01. | இல. 1334, பழைய கோட்டே வீதி, இராஜகிறிய | கொழும்பு |
| 02. | இல. 518, காலி வீதி, கொழும்பு 03 | கொழும்பு |
| 03. | நாராஹேன்பிட்ட மரமுந்திரிகை விற்பனை நிலையம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனக் கட்டிடம் | கொழும்பு |
| 04. | பலாங்கொட மரமுந்திரிகை விற்பனை நிலையம், 122 D, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொடை | இரத்தினபுரி |
| 05. | பெல்மடுல்ல மரமுந்திரிகை விற்பனை நிலையம், இரத்தினபுரி வீதி, பெல்மடுல்ல | இரத்தினபுரி |
| 06. | அம்பேபுஸ்ஸ, மரமுந்திரிகை விற்பனை நிலையம், அவன்ஹல, அம்பேபுஸ்ஸ, வரகாபொல | கேகாலை |
| 07. | படகமுவ மரமுந்திரிகை விற்பனை நிலையம், சுற்றுலா வசதிகள் நிலையம், குருநாகல் | குருநாகல் |

2.6.2.9 **இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள்**

**அட்டவணை 2.6.2.9 : உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள்**

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | ரன்திய புருட் என்ட் நட்ஸ், பயாகல, மக்கொன | களுத்துறை |
| 2. | ஆனந்த புட் சிட்டி இல. 272, அங்குரவாதொட்ட வீதி, ஹொரனை | களுத்துறை |
| 3. | பாணந்துறை கோப் சிட்டி, வரையறுக்கப்பட்ட பாணந்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஜனப்பிரிய மாவத்தை, பாணந்துறை | களுத்துறை |
| 4. | நியு அமெரிகன் சிக்கன் ஹட், இல. 16 ஸ்ரீ சாராநந்த மாவத்தை, களுத்துறை | களுத்துறை |

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 5. | தேசிய காலந்நடை வள அபிவிருத்திச் சபை, நாராஹேன்பிட்டி | கொழும்பு |
| 6. | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கம், இல. 21, காலி வீதி, தெஹிவளை | கொழும்பு |
| 7. | லயன் குரொசரி, மாக்பும்புர, பன்னிபிட்டிய வீதி, கொட்டாவ | கொழும்பு |
| 8. | தலகல ஸ்ரோஸ், தலகல | கொழும்பு |
| 9. | பெனோராமா சைனீஸ் ரெஸ்டரன்ட், கொட்டாவ | கொழும்பு |
| 10. | ரோயல் பேக்கர்ஸ், வெல்லவத்த | கொழும்பு |
| 11. | திருமதி கப்புவத்த, நாவல | கொழும்பு |
| 12. | நவமினி பிரவட் லிமிடட், பிட்டகோட்டே | கொழும்பு |
| 13. | Dairy Products and Milk Bar, நாராஹேன்பிட்ட | கொழும்பு |
| 14. | அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் | கொழும்பு |
| 15. | Namunukula Dairy Stores, வத்தளை | கம்பஹா |
| 16. | தேசிய திரிபோச நிறுவனம் | கம்பஹா |
| 17. | பிரஷ் பார்ம் சொப், காலி வீதி, ஹிக்கடுவ | காலி |
| 18. | சுனிலா குரொசரி, இல. 35, புதிய வீதி, அம்பலாங்கொடை | காலி |
| 19. | கோல்டன் மேட், 144, காலி வீதி, அஹுங்கம | காலி |
| 20. | DGM Agriculture Dept., லபுதுரவ, காலி | காலி |
| 21. | சம்பத் பாமசி என்ட் குரொசரி, இல. 39 E, மாத்தறை வீதி, அகுரஸ்ஸ | மாத்தறை |
| 22. | DGM Agriculture Dept, மாத்தறை | மாத்தறை |
| 23. | அபேகுணவர்த்தன ஸ்ரோர்ஸ், தெனியாய | மாத்தறை |
| 24. | DGM Agriculture Dept., தெலிஜ்ஜவில | மாத்தறை |
| 25. | வரை. யட்டிநுவர கங்கபளாத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொல்கஹுமுல சந்தி, பேராதனை | கண்டி |
| 26. | வரை. யட்டிநுவர மெத்த பளாத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், எம்பில்மீகம, பிலிமதலாவ | கண்டி |
| 27. | வரை. மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கம், எஹெலபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி | கண்டி |
| 28. | வரை. பூஜாபிட்டிய கூட்டுறவுச் சங்கம், பூஜாபிட்டிய | கண்டி |
| 29. | வரை. கண்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோப்சிட்டி விற்பனை நிலையம், பல்லேகெலே | கண்டி |
| 30. | கோப் சிட்டி, குண்டசாலை | கண்டி |
| 31. | செப்கோ சுப்பர், போகம்பர | கண்டி |
| 32. | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கண்டி | கண்டி |
| 33. | Royal Mall (Pvt) Ltd, கண்டி | கண்டி |
| 34. | Sunrise Super, குண்டசாலை | கண்டி |
| 35. | கடுகன்னாவ பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | கண்டி |
| 36. | வரை. கண்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கோப் சிட்டி விற்பனை நிலையம், மாத்தளை | மாத்தளை |
| 37. | வரை. கண்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கோப் சிட்டி விற்பனை நிலையம், லக்கல | மாத்தளை |

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 38. | தேசிய காலந்டை வள அபிவிருத்திச் சபை, பெலிகம | மாத்தளை |
| 39. | EPPCO Mini Mart, பிரதான வீதி, மாவனெல்ல | கேகாலை |
| 40. | தேசிய காலந்டை வள அபிவிருத்திச் சபை, மெல்சிறிபுர | குருநாகல் |

### 2.6.2.10 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதிகள்

| <u>சுற்றுலா விடுதி</u> | <u>மாவட்டம்</u> |
|---|---|
| 1. புத்தளம் சுற்றுலா விடுதி | - புத்தளம் |
| 2. ஹாதி சுற்றுலா விடுதி | - மட்டக்களப்பு |

### 2.6.2.11 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பதவியணி - 2022

**அட்டவணை 2.6.2.10 : இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பதவியணி**

| சம்பளக் குறியீடு | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2022 ஆம் ஆண்டில் உள்ள பதவியணி எண்ணிக்கை | | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | ஒப்பந்தம் | |
| HM 1-3 | பொது முகாமையாளர் | 01 | - | - | 01 |
| HM 1-1 | பிரதிப் பொது முகாமையாளர் | 01 | - | - | 01 |
| MM 1-1 | உதவிப் பொது முகாமையாளர் - நிதி | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - வியாபித்தல் மற்றும் ஆராய்ச்சி | 01 | 01 | - | |
| | உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிருவாகம் | 01 | - | - | 01 |
| | உதவிப் பொது முகாமையாளர் - கொள்கை மற்றும் திட்டமிடல் | 01 | - | - | 01 |
| JM 1-1 | பிராந்திய முகாமையாளர் / உதவிப் பிராந்திய முகாமையாளர் | 11 | 05 | 01 | 05 |
| | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் /ஆராய்ச்சி அலுவலர் | 02 | 01 | - | 01 |
| | பெருந்தோட்ட அலுவலர் | 01 | 01 | - | - |
| | வியாபித்தல் அலுவலர் | 01 | 01 | - | - |
| | தோட்ட அத்தியட்சகர் | 04 | 02 | - | 02 |
| | தரச்சான்றுப்படுத்தல் அலுவலர் | 02 | 01 | - | 01 |
| | நிருவாக அலுவலர் | 01 | 01 | - | - |
| | நிதி அலுவலர் | 01 | 01 | - | - |
| | சந்தைப்படுத்தல் மேம்பாட்டு அலுவலர் | 01 | 01 | - | - |
| | உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | 01 | - | - | 01 |
| | திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் | 01 | - | - | 01 |
| MA - 4 | மொழிபெயர்ப்பாளர் | 01 | - | - | 01 |
| MA 2-1 | பெருந்தோட்ட உதவியாளர் | 37 | 15 | 01 | 21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | - | - |
| | கணக்காய்வு உதவியாளர் | 02 | 02 | - | - |
| | நிதி உதவியாளர் | 01 | 01 | - | - |
| | போக்குவரத்து உதவியாளர் | 01 | 01 | - | - |
| MA 1-1 | முகாமைத்துவ உதவியாளர் | 57 | 42 | 6 | 09 |
| | வெளிக்கள உதவியாளர் | 22 | 10 | - | 12 |
| PL - 3 | சாரதி | 26 | 22 | 02 | 02 |
| | போயிலர் இயந்திர இயக்குனர் | 02 | - | 01 | 01 |
| PL - 2 | தொழிலாளர் நிருவாக அலுவலர் | 07 | 08 | - | - |
| | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 03 | - | - | 03 |
| PL - 1 | அலுவலக சிற்றூழியர் | 16 | 15 | 08 | - |
| | காவலாளி | 11 | 06 | 04 | 01 |
| | வாகன உதவியாளர் | 02 | 02 | - | - |
| | | <u>224</u> | <u>144</u> | **<u>23</u>** | **<u>65</u>** |

- அவசியத்தன்மையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் காரணமாக 2022.12.31 ஆம் திகதிக்கு தொழில் நிருவாக அலுவலர் 01 மற்றும் அலுவலக சிற்றூழியர் பதவிகள் 07 என்ற வகையில் மொத்தம் 08 ஊழியர் மிகை காணப்படுகின்றது.

# இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் விஸ்தரிப்பு மற்றும் சேவை வலையமைப்பு



# இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு



# 3. கூட்டுத்தாபன அபிவிருத்திப் பணிகள்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் பிரதானமாக 4 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

1. **விஸ்தரித்தல் நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம்.**
2. **தோட்ட அபிவிருத்தி, புனரமைப்பு, உற்பத்தித் திறனை வளர்த்தல்.**
3. **சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி.**
4. **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.**

## 3.1 விஸ்தரித்தல் நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம்

### 3.1.1 இலங்கையில் மரமுந்திரிகைப் பயிர்செய்கையை விஸ்தரித்தல்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விஸ்தரித்தல் மற்றும் ஆராயச்சிப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டு வர்த்தக நாற்றுமேடைகளில் செடிகள் உற்பத்தி செய்யப்படாமை மற்றும் 'கொவிட் – 19' தொற்றுநோய் காரணமாக நாட்டில் நிலவிய பாருளாதார, அரசியல் நெருக்கடி நிலைகளின் அடிப்படையில் நிவாரண உதவிப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டம் 1530.5 ஏக்கர்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு 1530.5 ஏக்கர்களாக நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டபோதிலும் இது 1637.76 ஏக்கர் அளவில் விஸ்தரித்தல் நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தப்பட்டது. இது 20 மாவட்டங்களில் நிவாரண உதவித்திட்டத்தின்கீழ் ஒட்டு மரமுந்திரிகை ஏக்கர் 860.7 மற்றும் விதை மரமுந்திரிகை ஏக்கர் 411 என்ற வகையில் பயிரிடப்பட்டதுடன், இந்த நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் வீட்டுத்தோட்டத்துக்கு ஒட்டு மரமுந்திரிகை ஏக்கர் 308.56 மற்றும் விதை ஏக்கர் 57 என்ற வகையில் பயிரிடப்பட்டது.

மேற்படி மாவட்டங்களில் 20 இலும் ஒட்டு மரமுந்திரிகை மற்றும் விதை மரமுந்திரிகை பயிர் செய்யப்பட்டுள்ள ஏக்கர் அளவுகள் பற்றிய தரவுகள் அட்டவணை 3.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1.1 : 2022ஆம் ஆண்டில் நிவாரண உதவி மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப் பகுதியின் அளவு**

| மாவட்டம் | | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) |
| 1 | புத்தளம் | 65.5 | 40.5 | 10 | 25 |
| 2 | குருநாகல் | 43.1 | | 10.9 | |
| 3 | கம்பஹா | 20.6 | | 0.4 | |
| 4 | அநுராதபுரம் | 130.5 | 20 | 69.5 | |
| 5 | வவுனியா | 20 | | | |
| 6 | மன்னார் | 5.5 | | | |
| 7 | முல்லைத்தீவு | 25 | 17 | | |
| 8 | யாழ்ப்பாணம் | 6.5 | | | |
| 9 | கிளிநொச்சி | 53 | 6 | | |
| 10 | மோனராகலை | 175 | 100 | 25 | |
| 11 | மாத்தளை | 50 | | 5.71 | |
| 12 | அம்பாறை | 40 | 115 | 50 | |
| 13 | பொலன்னறுவை | 44 | | 10 | |
| 14 | கண்டி | | | 12.05 | |
| 15 | பதுளை | 60 | | 54 | |
| 16 | அம்பாந்தோட்டை | 70 | | | |
| 17 | இரத்தினபுரி | 7 | 8 | 13 | 22 |
| 18 | மாத்தறை | 2 | | 48 | |
| 19 | மட்டக்களப்பு | 13 | 90 | | |
| 20 | திருகோணமலை | 30 | 15 | | 10 |
| **மொத்தம்** | | **860.7** | **411.5** | **308.56** | **57** |

### 3.1.2 மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பயன்களைப் பெற்றுக்கொடுத்தல்

ஒட்டு மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு ஓர் ஏக்கருக்கு ரூபா 9,500 தொகையும் விதை மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு ஓர் ஏக்கருக்கு ரூபா 3,500 தொகையும் இந்த நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவ்வாறாயினும், இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அளவு இந்தப் பணிக்கு எவ்வகையிலும் போதுமானதல்ல. எனவே, இப்பொழுது நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொடுப்பது உள்ளடங்கலாக ஏனைய விஸ்தரித்தல் சேவைகள் இலவசமாகப் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், பயிர்ச்செய்கை செய்யும் நிலத்தின் அளவுக்குத் தேவையான ஒட்டுச் செடிகள் மற்றும் விதை செடிகள் இலவசமாகப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின்11 பிராந்திய அலுவலகங்களூடாக மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் 20 மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்றது.

## 3.2 தோட்ட அபிவிருத்தி, புனரமைப்பு மற்றும் உற்பத்தித்திறனை வளர்த்தல்

### 3.2.1 மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்

#### 3.2.1.1 பயிர்ச்செய்கைப் பொருட்களை உற்பத்தி செய்தல்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின்கீழ் காணப்படுகின்ற மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை பொருட்கள் உற்பத்தி நிலையங்களில் சிறந்த விவசாய முறையியல்களின்கீழ் உயர் மட்ட உற்பத்தித்தரத்தைப் பேணி தாய் மரங்களைப் பராமரிப்புச்செய்து அந்த மரங்களில் இருந்து 39,200 கன்றுகளுக்கான அம்சங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. 2022ஆம் ஆண்டில் ஒட்டுச் செடி உற்பத்தி செய்வதற்காக தாய் மரங்கள் 49,000 பயன்படுத்தப்பட்டன.

#### 3.2.1.2 நாற்றுமேடை முகாமைத்துவம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின்கீழ் காணப்படுகின்ற மத்திய நாற்றுமேடையில் உயர் தரத்தைக்கொண்ட புதிய வகைகளை உள்ளடக்கிய 23296 ஒட்டு நாற்றுக்கள் மற்றும் 3494 விதை நாற்றுக்களை வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தனியார் தோட்ட உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 2022ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார, அரசியல் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக செடி உற்பத்தியை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. குறித்த ஆண்டில் கமன்தளுவ மற்றும் மிகிந்தலை நாற்றுமேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுச் செடிகளின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2022 ஒட்டு நாற்றுக்கள் மற்றும் விதை நாற்றுக்களை</u>**

**அட்டவணை 3.2.1.2 : 2022 ஆம் ஆண்டில் மரமுந்திரிகைச் செடி உற்பத்தி**

| நாற்றுமேடையின் பெயர் | உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டுச் செடிகளின் எண்ணிக்கை | உற்பத்தி செய்யப்பட்ட விதை செடிகளின் எண்ணிக்கை |
|---|---:|---:|
| 1. கமன்தளுவ | 10974 | 524 |
| 2. மிகிந்தலை | 12322 | 2970 |
| **மொத்தம்** | **23296** | **3494** |

### 3.2.1.3 தோட்டங்களில் புதிய பயிர்ச்செய்கை

2022 ஆம் ஆண்டு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின்கீழ் காணப்பட்ட கொண்டச்சி, புத்தளம் மற்றும் மகாஓயா ஆகிய தோட்டங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதாரம் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக அபிவிருத்திப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டன. மேலும் கொண்டச்சித் தோட்டத்தில் 86 ஏக்கர்கள், புத்தளம் தோட்டத்தில் 20 ஏக்கர்கள், மகாஓயா தோட்டத்தில் 21 ஏக்கர்கள் அளவான காணிகளில் பயிர்ச்செய்கைகளுக்கு இடையே புதிய செடிகள் நாட்டப்பட்டன. அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒட்டு மரக்கன்றுகள் பயன்படுத்தப்பட்டன.

| | | |
|---|---|---|
| கொண்டச்சி | - | ஒட்டுச் செடிகள் 5246 |
| புத்தளம் | - | ஒட்டுச் செடிகள் 1400 |
| மகாஓயா | - | ஒட்டுச் செடிகள் 1500 |
| மொத்தம் | - | ஒட்டுச் செடிகள் 8146 |

### 3.2.1.4 அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு செடிகளைப் பெற்றுக்கொடுத்தல்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின்கீழ் இயங்கிவருகின்ற விவசாய ஏற்றுமதிக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2002ஆம் ஆண்டில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்காக பயனாளிகளுக்கு ஒட்டு மரமுந்திரிகைச் செடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. குருநாகல் மாட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 11,060 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 250 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 4,000 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 3,895 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 7,893 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 7,493 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளும் என்ற வகையில் மொத்தமாக 34,591 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 3.2.1.5 உற்பத்தித்திறனை மேம்படுத்தல்

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் நோய்கள் மற்றும் கிருமிகளைக் கட்டுப்படுத்தல் சிறந்த விவசாய முறையியல்களைப் பயன்படுத்தி விளைச்சலை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு ''ஹெலோபெல்டிஸ்''இன் மூலமான

சேதங்கள் மற்றும் மரக்குற்றிகள் மற்றும் அதன் வேர்களை தாக்குகின்ற பூச்சிகளை அழிப்பதற்காக பூச்சிக்கொல்லி நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக மரமுந்திரிகை நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2002ஆம் ஆண்டின் இறுதியில் பயனாளிகளான விவசாயிகள் 558 பேருக்கு விவசாய பயிற்சி வகுப்புக்கள் 68 நடாத்தப்பட்டன. மேலும், மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் தரம், விளைச்சல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்திக்கொள்ளக்கூடிய முறையியல்களை இனங்காணத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அவ்வாறே இந்த ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார ஸ்திரமற்ற நிலைமை காரணமாக இரசாயன உரம் இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்பட்டதுடன், இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக கமன்தளுவத் தோட்டத்தில் சேதனப் பசளை மெற்றிக்தொன் 10 உற்பத்தி செய்யப்பட்டு பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது.

## 3.3 சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்

### 3.3.1 தோலுடனான மரமுந்திரிகையைக் கொள்வனவு செய்தல்

சந்தை போட்டித்தன்மை நிலைமைகளுக்கு முகங்கொடுத்தல் மற்றும் செலவினத்தை குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன், உள்நாட்டு மரமுந்திரிகை நுகர்வுக்கான கேள்வியைப் பூர்த்திசெய்தல் மற்றும் தரம் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு வழங்குவதற்காக இந்த ஆண்டில் சிவில் பாதுகாப்புத் திணைக்கத்தினூடாக தோலுடனான மரமுந்திரிகை மெற்றிக்தொன் 79.05 கொள்வனவு செய்யப்பட்டது. இதனால் போட்டித்தன்மை மிக்க சந்தை விலை மட்டம் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டில் கூட்டுத்தாபனத் தோட்டங்களில் இருந்து கிடைத்த மெற்றிக்தொன் 88.24 அளவான விளைச்சல் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின்கீழ் காணப்படுகின்ற புத்தளம் மற்றும் நெதகமுவ பகுதியில் அமைந்துள்ள பதனிடல் நிலையங்களில் பதனிடல் நடவடிக்கைளுக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

### 3.3.2 மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழிலைப் பலப்படுத்தல்

உயர் தரத்தைக்கொண்ட மரமுந்திரிகை பருப்பு உற்பத்தியை சந்தைக்கு சமர்ப்பிப்பதன்மூலம் உச்சளவான விலையை உழைத்துக்கொள்ளும்பொருட்டு உயர் தர உற்பத்திப் பொறிமுறை அத்தியாவசியமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு இணங்க, மரமுந்திரிகை பதனிடுபவர்களுக்கான

உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் மின்சக்தியினால் இயக்கப்படும் மரமுந்திரிகை வெட்டும் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல், சிறந்த உற்பத்தி முறையியல்கள் (புஆ) பயன்படுத்தி மற்றும் பெறுமதிசேர்த்தல் மற்றும் உயர் தரங்கள் சம்பந்தமாக பதனிடுபவர்களைப் பயிற்றுவித்தல், பதனிடும் சங்கங்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவது மற்றும் சந்தை மேம்பாட்டுக்கான உதவிகள் பெற்றுக்கொடுப்பதும் இடம்பெற்றது.

### 3.3.3 மரமுந்திரிகை பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல்

கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான மரமுந்திரிகை பதனிடல் நிலையம் புத்தளம் மற்றும் நெதகமுவ பகுதியில் அமைந்துள்ளன. கூட்டுத்தாபன தோட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தோலுடனான மரமுந்திரிகையைப் பதனிடுவதற்கு பயன்படுத்திக்கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகைப் பருப்பு கொள்ளுப்பிட்டி, நாரஹஹன்பிட்ட, இராஜகிரிய, பலங்கொட, அம்பேபுஸ்ஸ, படகமுவ மற்றும் பெல்மடுல்ல ஆகிய இடங்களில் அமைந்துள்ள மரமுந்திரகை விற்பனை நிலையங்கள் 07க்கு மேலதிகமாக நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற உத்தரவுபெற்ற 40 விற்பனை நிலையங்களைப் பயன்படுத்திக்கொண்டு நுகர்வோருக்கு விற்பனை செய்வது பேணிவரப்படுகின்றது.

புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர் தரமான மரமுந்திரிகை உற்பத்தியை விற்பனை செய்வதன்மூலம் ரூபா மில்லியன் 112.39 ஆன தொகையை உழைத்துக்கொள்ள கூட்டுத்தாபனத்துக்கு இயலுமாயிற்று.

### 3.3.4 மரமுந்திரிகை உற்பத்தியை ஏற்றுமதி செய்தல் மற்றும் அந்நியச் செலாவணியை உழைத்துக்கொள்ளல்

2022ஆம் ஆண்டில் உயர் தரத்தைக்கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகைப் பருப்பு மெற்றிக்தொன் 58.20 வெளிநாட்டு சந்தைக்கு வழங்கப்பட்டதன்மூலம் ரூ. மி. 212.83 அந்நியச் செலாவணியை இலங்கை உழைத்துக்கொள்ள இயலுமாயிற்று. 2021ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரகைப் பருப்பு 26.26 ஏற்றுமதி செய்யப்பட்டதன்மூலம் ரூ.மி. 89.07 ஆன அந்நியச் செலாவணி உழைத்துக்கொள்ளப்பட்டது. இதற்கமைய இந்த ஆண்டில் ஏற்றுமதிக் கொள்ளளவு மற்றும் அந்நியச் செலாவணி உழைப்பு 2021ஆம் ஆண்டைவிட வளர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளதுடன் இந்த ஆண்டில் பூகோள ரீதியாக நிலவிய ‘கொவிட் – 19’ நிலைமை மற்றும் உள்நாட்டு சுற்றுலாக்

கைத்தொழிலில் ஏற்பட்ட துரித பின்னடைவு காணப்பட்டபோதிலும் இந்த ஆண்டில் அந்நியச் செலாவணி உழைப்பு வளர்ச்சியடைந்துள்ளமை பெரும் வெற்றியாக இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

### 3.3.5 மரமுந்திரிகை இறக்குமதி

#### 3.3.5.1 உள்நாட்டு நுகர்வுக்கான இறக்குமதி

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரமுந்திரிகை போதியளவில் இல்லாமை காரணமாக குறிப்பாக, ஜனவரி, பெப்ருவரி, மார்ச் ஆகிய மாதங்களில் சிறியளவிலான மரமுந்திரிகை பதனிடுபவர்களுக்குத் தேவையான தோலுடனான மரமுந்திரிகை உள்நாட்டுச் சந்தையில் பற்றாக்குறையை எதிர்கொண்டது. இதற்குத் தீர்வாக சிறியளவிலான மரமுந்திரிகை பதனிடுபவர்களுக்கு வரிச் சலுகையின்கீழ் தோலுடனான மரமுந்திரிகையை இறக்குமதி செய்ய அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

இந்த இறக்குமதி அனுமதிப் பத்திரம் தற்காலிக அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திச் சந்தையில் பற்றாக்குறை காலப்பகுதியில் மாத்திரம் வழங்கப்பட்டது. இலங்கை சுங்கத்தின் அறிக்கைகளுக்கு அமைய தோலுடனான மரமுந்திரிகை மெற்றிக்தொன் 207.57 இறக்குமதி செய்யப்பட்டு சிறியளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் பதனிடுபவர்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டது. இதற்கமைய மரமுந்திரிகை பதனிடுதல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தை மேம்படுத்துவற்கும் கூட்டுத்தாபனத்துக்குத் தலையிட வாய்ப்புக் கிடைத்தது.

### 3.4 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஆராய்ச்சிப் பிரிவின் பிரதான பணியாக இருப்பது மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் தரம் மற்றும் மரமுந்திரிகை அறுவடையை மேம்படுத்திக்கொள்வதற்காக நிலைபேறான மற்றும் வினைத்திறன் மிக்க பயிர்ச்செய்கை முறைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை பயிர்ச்செய்கைக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப முறைமைகளை மேம்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகும்.

ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்லாண்டு ஆராய்ச்சிகளை தொடர்ச்சியாக பேணி வருவது 2022ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிமாக, நிலைபேறான பயிர்ச்செய்கை முறைகள்

களைக்கொல்லிகள் மற்றும் நோய் முகாமைத்துவம் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தயாரிப்பு முறைகளை நவீன மயப்படுத்துவது பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே மரமுந்திரிகை மரங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பூச்சிகள் மற்றும் நோய்களுக்கான தீர்வுகளைக் கண்டறிதல் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

# 4. நிருவாக நடவடிக்கைகள்

ஈடுபட்டுள்ளவர்கள் மரமுந்திரகை உற்பத்திகளைக் கொள்வனவு செய்கின்ற தரப்பினர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன் மிக்க சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் முறையான முகாமைத்துவப் பயன்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆற்றல் கிடைத்தது. அரச தொழில்முயற்சி என்ற வகையில் சேவை வழங்கப்பட்டு வருவதுடன், இலாபம் உழைக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதனால் கூட்டுத்தாபனத்தின் சகல தரப்பினர்களினதும் ஒத்துழைப்பை இதற்குப் பெற்றுக்கொள்ள இயலுமாயிற்று.

இதற்காக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பதவியணியினரின் உதவியும் ஒத்துழைப்பும் வெகுவாகக் கிடைத்தது. அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தி உபாய முறைகளுக்கு இசைவாக மக்களின் வருமான உருவாக்கம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் இதற்கமைய செயற்பட இயலுமாயிற்று.

## 4.1 2022.12.31ஆம் திகதிக்கு பதவியணியினர் முகாமைத்துவம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை, ஆரம்ப மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவை மட்டங்களைச் சேர்ந்த ஊழியர்களினால் கடமை நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டு வருவதுடன், 2022ஆம் ஆண்டில் 167ஆகக் காணப்பட்ட பதவியணியினரால் கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வினைத்திறனும் விளைத்திறனும் மிக்க சேவையாக்கப்பட்டுள்ளது. மேற்படி பதவியணியினர் தலைமையலுவலகம் மற்றும் நாடளாவிய மற்றும் பிராந்திய அலுவலகங்களில் சேவையாற்றி வருகின்றார்கள். இந்த பதவியணியினருக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள், பதனிடல் நிலையங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களில் காடுகளை சுத்தம் செய்தல், குழி தோண்டல், கன்றுகளை நாட்டுதல், உரம் இடுதல், களையகற்றுதல், மரமுந்திரிகை விளைச்சலை சேகரித்தல், மரமுந்திரகைகளை வெட்டுதல், மரமுந்திரிகைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கென நாளாந்த அடிப்படையில் சுமார் 200 தொழிலாளர்கள் சேவையாற்றி வருகின்றார்கள்.

**அட்டவணை 4.1:2022ஆம் ஆண்டின் பல்வேறு சேவை மட்டங்களின்கீழ் சேவையாற்றிய பதவியணியினர்**

| **சேவை மட்டம்** | **சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சிரேஷ்ட | 05 |
| மூன்றாம் நிலை | 15 |
| இரண்டாம் நிலை | 79 |
| ஆரம்ப நிலை | 68 |
| **மொத்தம்** | **167** |

## 4.2 2022 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற வெற்றிகள்

2020ஆம் ஆண்டு மற்றும் 2021ஆம் ஆண்டில் பதிவான சந்தைப்படுத்தல் பணிகள் மூலம் இலாபம் பெறும் நிலைமையை 2022ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக பேணி வர இயலுமாயிற்று. இதற்காகக் கூட்டுத்தாபனத்தின் வணிகச் செயற்பாடுகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் விளைத்திறனும் வினைத்திறனும் மிக்க வழிகாட்டல் மற்றும் பதவியணியினரின் அர்ப்பணிப்பும் இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்தது. பின்வரும் தடைகள் காரணமாக செயலாற்றுகையை உச்ச மட்டத்துக்குக்கொண்டு வர இயலவில்லை.

- 2020 – 2022 ஆண்டுகளில் பூகோள ரீதியாக நிலவிய 'கொவிட் – 19' தொற்றுநோய் நிலைமையின் தாக்கம் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் ஸ்தீரமற்ற தன்மை மற்றும் அக்காலப்பகுதியில் நாட்டில் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை போன்ற நெருக்கடிகள் காணப்பட்டமை.

- சீரற்ற காலநிலை காரணமாக அதாவது, பூ பூக்கும் காலப்பகுதியில் அதிக வரட்சி ஏற்பட்டமையினால் பூக்கள் வெயில் காரணமாக பாதிக்கப்பட்டு தோட்டங்களில் விளைச்சல் எதிர்ப்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைவாக இருந்தமை.

- உள்நாட்டு தோலுடனான மரமுந்திரிகைக் கேள்விக்கு ஏற்றவாறு வழங்கல் பதிவு செய்யப்படாமை.

- தொழிலாளர்களின் செலவினங்கள் மற்றும் பொருட்களின் செலவினங்கள் அதிகரித்தமை.

- மீண்டெழும் மற்றும் மூலதன கொடைகள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக புதிய பணிகளை ஆரம்பிக்கும்போது மற்றும் அத்தியாவசியமான சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும்போது தடைகள் ஏற்பட்டன. இதற்கமைய இந்தப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு கூட்டுதாபனம் உழைத்துக்கொண்ட நிதியைப் பயன்படுத்திக்கொள்ளுவது இடம்பெற்றது. இதன் பெறுபேறாக வர்த்தக ரீதியான மற்றும் அபிவிருத்திப் பணிகளின் முதலீடுகளுக்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டது.

- திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாது போனமை.

## 5. பணிப்பாளர் சபை அறிக்கை

2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை சார்பாக இவ்வாறு சமர்ப்பிக்கின்றேன்.

திறைசேரியின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2003 யூன் மாதம் மாதம் 02ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் பீ.ஈ.டீ./12 இற்கு அமைய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் 2023 செப்டெம்பர் 12ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

### 5.1 ஆரம்பம்

1972ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, அரசாங்க விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் முதலாம் உட்பிரிவின்கீழ் 60/7ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1973 மே 25ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் அப்போதைய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் உத்தரவின் பேரின் ரூ.மி. 40 ஆன ஆரம்ப மூலதனத்துடன் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது.

### 5.2 பெறுபேறு

நடப்பு ஆண்டில் நிதி பெறுபேறு மற்றும் உரிமையாண்மை மாற்றங்கள் சம்பந்தமான தரவுகள் உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 5.3 வியாபார மீளாய்வு

2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டின் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் நிதி நிலைமை கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது பற்றிய மதிப்பீடு தவிசாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 5.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

நிதிக் கூற்றுக்களில் நடைமுறை ஆண்டு தொடர்பான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இந்த அறிக்கையின் பக்க இலக்கம் 62 இல் குறிப்பு இலக்கம் 7 இன் மூலம் விளக்கப்பட்டுள்ளது. இந்த குறிப்பில்

சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் அவற்றின் தற்போதைய சந்தைப் பெறுமதிகளுக்கு இடையே போதியளவிலான குறிப்பிடத்தக்களவான வித்தியாசம் காணப்படுவதில்லை.

## 5.5 ஒதுக்கம்

இந்த அறிக்கையில் பக்க இலக்கம் 73 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மாற்றம் பற்றிய கூற்றில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கங்களின் ஒழுங்கமைப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5.6 பணிப்பாளர் சபை

**அட்டவணை 5.6 : 2022.01.01ஆம் திகதியிலிருந்து 2022.12.31ஆம் திகதி வரை பணிப்பாளர் சபையில் இருந்த உறுப்பினர்கள்**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திருமதி ஆர். ஏ. எஸ். கே. ரத்நாயக்க | தவிசாளர் |
| 02. | செலவி அசோகா லங்காதிலக | பிரதித் தவிசாளர் |
| 03. | திருமதி திலகா ஜயசுந்தர | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2022.01.01 முதல் 2022.01.31 வரை) |
| 04. | திருமதி ஏ. யூ. கே. தொடம்வல | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) 2022.06.06 முதல் 2022.12.31 வரை |
| 05. | செல்வி கே. ஏ. சீ. பிரியதர்சனி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி) 2022.06.06 முதல் 2022.12.31 வரை |
| 06. | திரு. சாமர சுபசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 07. | திரு. உபாலி வடுஆராச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08. | திரு. எச். எம். சீ. கே. ஹேரத் | பணிப்பாளர் சபை உறுப்பினர் 2022.01.01 முதல் 2022.01.31 வரை |
| 09. | திரு. ஐ. டப்ளியு. ஏ. சமன் குமார | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10. | திரு. பீ. பி. கொடிகார | பதில் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபைச் செயலாளர் (2022.01.01 முதல் 2022.08.15 வரை) |
| 11. | திரு. கே. எஸ். விஜயகீர்த்தி | பதில் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபைச் செயலாளர் (2022.09.06 முதல்) |

## 5.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

அரச தொழில்முயற்சி வழிகாட்டல்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

## 5.8 நியாயாதிக்கக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்துக்கு மற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சகல நியாயாதிக்கக் கொடுப்பனவுகளும் இந்த ஆண்டில் முறையாக செலுத்தப்பட்டுள்ளன.

## 5.9 சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்கு பாதகமான மற்றும் சுற்றாடல் மாசடைகின்றவாறான எந்தவொரு செயற்பாட்டிலும் கூட்டுத்தாபனம் தலையிட்டிருக்கவில்லை.

## 5.10 நிதி நிலைமைக் கூற்றுக்குப் பின்னரான சம்பவங்கள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் கணக்குகள் மூலம் சீராக்கல் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவற்காக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 5.11 கணக்காய்வாளர்கள்

2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்க கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பெயரில்,



**கே. எஸ். விஜயகீர்த்தி**
**பணிப்பாளர் சபைச் செயலாளர்**

# 6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

முன்னைய சுற்றறிக்கை அறிவுரைகள் மற்றும் 2021.11.16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 01/2021இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய 2022ஆம் ஆண்டுக்கு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன், இது ஐந்து உறுப்பினர்களையும் ஓர் அவதானிப்பாளரையும் உள்ளடக்கியதாக 6 பேர்கொண்ட குழுவாகக் காணப்படுகின்றது. மேற்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

**அட்டவணை 6 : 2022.01.01 திகதி முதல் 2022.12.31 திகதி வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள்**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | செல்வி கே. ஏ. .சீ. பிரியதர்சனி | குழு தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி |
| 02. | திருமதி ஏ. யூ. கே. தொடம்வல | குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) |
| 03. | திரு. சாமர சுபசிங்க | குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 04. | திருமதி பீ. பி. கொடிகார | குழு செயலாளர் (பதில்)<br>பொது முகாமையாளர் (பதில்) (2022.01.01 திகதி முதல் 2022.08.15 திகதி வரை) |
| 05. | திருமதி கே. எஸ். விஜயகீர்த்தி | குழு செயலாளர் (பதில்),<br>பொது முகாமையாளர் (பதில்)<br>(2022.09.02 திகதி முதல் 2022.12.31 திகதி வரை) |
| 06. | திருமதி வீ. யூ. லியனகே | குழுவின் ஏற்பாட்டாளர் மற்றும் குழு உறுப்பினர், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) |
| 07. | திரு. ஆர். எம். ஏ. ஜானக | குழு அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர்,<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>(2022.01.01 திகதி முதல் 2022.11.16 திகத வரை) |
| 08. | திருமதி ஜீ. கே. யூ. அபேரத்ன | குழு அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர்<br>தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>(2022.12.29 திகதி முதல் 2022.12.31 திகத வரை) |

2022ஆம் ஆண்டில் திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் கணக்காய்வுக் குழுவின் தவிசாளராகச் செயற்பட்டார் என்பதுடன், குழு செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு இருக்காததால் பதில் செயலாளராக பதில் பொது முகாமையாளர் நடவடிக்கை மேற்கொண்டார். 202ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மொத்த கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2022ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்கும் மேற்படி சிபாரிசுகளுக்கு பணிப்பாளர் சபையின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய முன்னாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் கணக்காய்வுக் குழு நடவடிக்கை எடுத்தது.

1. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு பயிர்ச்செய்கைக்கான உரிமை சாட்டுதல் செய்யப்பட்டுள்ள போதிலும் உரிய அரச நிறுவனங்களினால் இதுவரை சட்ட ரீதியான உரித்து சாட்டுதல் செய்யப்படாதுள்ள கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள் மற்றும் விதை பயிர்நிலங்கள் காணப்படுகின்ற காணிகளின் சட்டரீதியான உரித்தை பெற்றுக்கொள்வதற்காக விடயப் பொறுப்பு அமைச்சின் ஒத்துழைப்பை பெற்று தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமான தாமதமடைந்து இருந்த இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களை தயார் செய்யும் பணிகளை துரிதமாக நிறைவுசெய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. மீளாய்வு ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளிடப்பட்டிருந்த கணக்காய்வு வினாக்களில் உள்ளடங்குகின்ற அவதானிப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடி அதற்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வெளியிடப்பட்டு இருந்த அறிக்கைகளில் உள்ளடங்கும் சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் காணப்பட்ட சிக்கல்களை இனங்கண்டு அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபன தோட்டங்கள் மற்றும் விதை பயிர் நிலங்களில் இருந்து சேகரித்துக்கொள்ளப்பட்ட தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் தொடர்பில் அறிக்கை இடப்பட்ட விடயங்களுக்கு அமைய மேற்படி நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக தேவையான மீளாய்வுகளை மேற்கொண்டமை.

6. கூட்டுத்தானத்தின் உரிமம் பெற்ற மற்றும் உரிமம் பெறாத விற்பனை நிலையங்களின் கடன்பட்டோர் நிலுவைகளை அறவிட்டுக்கொள்ளும்போது இடம்பெற்றுள்ள நடைமுறைசார் தாமதங்கள் தொடர்பில் காரணங்களை வினவி அது சம்பந்தமான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். உரிமம் பெற்ற மற்றும் உரிமம் பெறாத விற்பனை நிலையங்களுக்கு மரமுந்திரிகைப் பருப்பை

கடனுக்கு விற்பனை செய்யும்போது விற்பனை செய்தல் மற்றும் அதற்காகப் பின்பற்ற வேண்டிய முறையான முறையியல் தொடர்பில் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

7. கூட்டுத்தாபனத்தின் புத்தளம் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்துத் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் இலக்கம் 104இன் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை மீளாய்வு செய்து தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

8. மீளாய்வு காலப்பகுதிக்குள் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் மீளாய்வுகளை மேற்கொள்ளல்.

**கே. ஏ. சீ. பிரியதர்சனி**

**தவிசாளர் – கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

# 7. 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

## 7.1 மரமுந்திரிகை பயிர்ச்செய்கை நிவாரண உதவித் திட்டம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

திறைசேரி ஏற்பாடுகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட மரமுந்திரிகை நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் ஒட்டு மரமுந்திரிகை ஏக்கர்கள் 1169.26 மற்றும் விதை மரமுந்திரிகை ஏக்கர்கள் 468 என்ற வகையில் மொத்தமாக 1637.76 ஏக்கர்கள் 20 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு பயிர் செய்யப்பட்டுள்ளன. 3590 விவசாயக் குடும்பங்களுக்கு இதன்மூலம் பயன்கள் கிடைத்துள்ளன. 2022ஆம் ஆண்டில் இந்த நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் குறிப்பாக வீட்டுத் தோட்டத்துக்கும் செடிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூ. மி. 7.00 ஆகும். இந்த ஆண்டிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்று நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்து கொள்ள முடியாது போன போதிலும் இந்தக் கருத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு கூட்டுத்தாபனத்துக்கு இயலுமாயிற்று.

## 7.2 பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்

### 7.2.1 பயிர்ச்செய்கை பொருட்களை உற்பத்தி செய்தல்

பல்வேறு பிரதேசங்களுக்கும் பொருத்தமான புதிய வகைகளை உற்பத்தி செய்து சிறிய மரமுந்திரிகை காணி உரிமையாளர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக மாத்தளை மாவட்டத்தில் நாலந்த, அநுராதபுர மாவட்டத்தில் விலச்சிய, அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா, மொனராகலை மாவட்டத்தில் சுதுவத்துர ஆர மற்றும் புத்தளம் மாவட்டத்தில் இலவங்குளம் ஆகிய விதை பயிர்நிலங்கள் பராமரிப்புச் செய்யப்பட்டன. விஸ்தரித்தல் சேவைகளுக்கு மற்றும் வணிகப் பணிகளுக்குத் தேவையான ஒட்டுச் செடிகளை உற்பத்தி செய்யத் தேவையான உயர் தரத்தைக்கொண்ட 49000 தாய் செடிகளும் மற்றும் 39200 கன்றுகளும் இதன்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. மி. 7.12 ஆகும். இந்த ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்தீரமற்ற தன்மை காரணமாக இந்த ஆண்டில் செடி உற்பத்தியை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது.

### 7.2.2 உற்பத்தியை மேம்படுத்தல்

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் கிருமிகளை அழித்தல் மற்றும் சிறந்த விவசாய முறையியல்களைப் பயன்படுத்துவதன்மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்தும்

நோக்கத்துடன் "ஹெலோபெல்டிஸ்" பூச்சிகளின் பாதிப்பு மற்றும் மரக்குற்றி மற்றும் அதன் வேர்களைப் பாதிக்கின்ற பூச்சி நோய்களை ஒழிப்பதற்காக பூச்சிக்கொல்லி நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்த ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார உறுதியற்ற நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியவில்லை.

மேலும் இந்த ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார உறுதியற்ற நிலைமை காரணமாக இரசாயன உரம் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதுடன், இந்த நிலைமையைத் தவிர்த்துக்கொள்வதற்கு கமன்தளுவ தோட்டத்தில் சேதனைப் பசளை 10 மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டு பயிர்ச் செய்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

### 7.2.3 நாற்று மேடை முகாமைத்துவம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் மத்திய நாற்றுமேடைகள் 08 காணப்படுவதுடன், இவை கமன்தளுவ, மஹீயங்கனை, காடி, மிகிந்தலை, சந்திரிக்காவெவ, தம்புள்ளை, கும்புக்கன மற்றும் மங்களகம பகுதிகளில் அமைந்துள்ளன. நவீன தொழில்நுட்ப நிலைமைகளின்கீழ் ஒட்டுக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட பொலி வலை குடிசைகள் கமன்தளுவ, மிகிந்தலை, மஹீயங்கனை, காடி நாற்றுமேடைகளில் இவ்வாறான ஆறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நாற்று மேடைகளில் 2022ஆம் ஆண்டுக்கு உயர் தரத்தைக்கொண்ட ஒட்டுக்கன்றுகள் 440650உம் விதை செடிகள் 21500உம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், அந்த ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார உறுதியற்ற நிலைமை காரணமாக திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டி இருந்த மூலதனக் கொடைகள் மட்டுப்படுத்தப்பட்டதனால் செடி உற்பத்தியை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. 2021ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து எஞ்சியிருந்த ஒட்டுச் செடி மற்றும் விதைச் செடிகளைப் பராமரிப்புச் செய்வதன்மூலம் இந்த ஆண்டில் செடிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டுக்கு 23296 *ஒட்டு நாற்றுக்கள் மற்றும்* 3494 விதை *நாற்றுக்களை* வெற்றிகரமாக உற்பத்தி செய்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

### 7.2.4 அபிவிருத்தி கருத்திட்டயங்களுக்குச் செடிகளைப் பெற்றுக்கொடுத்தல்

2022ஆம் ஆண்டில் "ஏற்றுமதிசார்ந்த மரமுந்திரிகை கொத்தணிக் கிராமம் கருத்திட்டம்" கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் ஒட்டு மரமுந்திரிகைச் செடிகள் 34,591 ஐ 494 ஏக்கர்களில் பயிர் செய்வதற்காக பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்தச்

செயற்றிட்டத்துக்கு இராஜாங்க அமைச்சிடமிருந்து ரூபா மில்லியன் 10.05 வழங்கப்பட்டது.

**7.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

வடமேல் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. செடிகளை இனப்பெருக்கம் செய்தல், உரப் பயன்பாடு, செடிகளின் அடர்த்தியான தன்மை, மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையில் உள்ள நோய்கள் மற்றும் பூச்சிகளை அழித்தல், இடையீட்டு உப பயிர்ச்செய்கை, கூட்டு மட்டும் விதைப் பயிர்ச்செய்கைகள், ஒட்டு தொழில்நுட்ப முறையியல்கள் அறுவடை பற்றி ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன அமுல்படுத்தப்படுகின்றன. குறித்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் தொடர்பாக செயலமர்வுகள் மற்றும் விஸ்தரித்தல் சேவைகள் மூலம் விவசாயிகள் விழிப்புணர்வு ஊட்டப்படுகின்றனார்கள். இதற்கு மேலதிகமாக 2022ஆம் ஆண்டில் ஆராய்ச்சி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பல்லாண்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாகவும் பேணி வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கென செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் 1.94 ஆகும்.

**7.4 கூட்டுத்தான தோட்டங்களில் புதிய பயிர்ச்செய்கை மற்றும் பயிர்ச்செய்கைகளை புனரமைப்புச் செய்தல்**

2021ஆம் ஆண்டில் புத்தளம் தோட்டத்தின் 25 ஏக்கர் அளவான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக கொண்டச்சி தோட்டத்தில் 86 ஏக்கர்களும் புத்தளம் தோட்டத்தில் 20 ஏக்கர்களும் மகாஓயா தோட்டத்தில் 21 ஏக்கர்களும் இடைப் பயிர்ச்செய்கைக்கான செடிகள் நாட்டப்பட்டன. இந்த ஆண்டில் தோட்டங்களில் இருந்து கிடைத்த தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் அறுவடை மெற்றிக்தொன் 88.24 மற்றும் தேங்காய்கள் 92639 பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்த கருத்திட்டத்துக்கு திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் ரூ.மி. 10.02 ஆன தொகையும் கூட்டுத்தாபனத்தினால் உழைத்துக்கொள்ளப்பட்ட ரூ. மி. 32.74 ஆன தொகையும் செலவிடப்பட்டது.

**7.5 அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம்**

**7.5.1 சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் கைத்தொழிலை மேம்படுத்தல்**

கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் இருந்து கிடைத்த தோலுடனான மரமுந்திரிகை அறுவடை, மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறியளவிலான பதனிடுபவர்களிடம் கொள்வனவு செய்யப்பட்ட மரமுந்திரிகைப் பருப்பு புத்தளம் மற்றும்

நெதகமுவவில் அமைந்துள்ள பதனிடல் நிலையங்களில் பதனிடலுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அவை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக கூட்டுத்தாபனத்தின் பிரதான விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இதற்கு உரிமை பெற்ற 40 விற்பனை நிலையங்களை உள்ளடக்கிய கூட்டுத்தாபனத்தின் விற்பனை வலையமைப்பு பயன்படுத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் கூட்டுத்தாபனம் உழைத்துக்கொண்ட மொத்த வருமானம் ரூ. மி. 112.39 ஆகும். இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம் மூலம் புத்தளம் மற்றும் நெதகமுவ மரமுந்திரிகை பதனிடல் நிலையங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூபா. மில்லியன் 26.65 ஆகும்.

### 7.5.2 **மனித வள அபிவிருத்தி**

பதவியணியினரின் சகல பதவிகளினுள் பதிவுகளையும் சேர்ந்த அலுவலர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான சேவைசார் பயிற்சி அமர்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் பணிகளின் விளைதிறனை மேம்படுத்தவும் அவர்களின் விடய ரீதியான அறிவை இற்றைப்படுத்தவதற்கும் புதிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தவுடன் சுய ஊக்கம் மூலம் வினைத்திறனை மேம்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டில் ஓர் அலுவலர் பெறுகைச் செயன்முறையைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டார். மேலும் முகாமைத்துவ உதவி அலுவலர்கள் பன்னிரண்டு (12) பேருக்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அனுசரணையின்கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

# 8. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான நடுத்தரக் கால நடவடிக்கைகள்

செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் அமுல்படுத்த உத்தேசியத்துள்ள பிரதான நடுத்தரகால நடவடிக்கைகள் சிலவாகும்.

01. இலங்கை மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் பரம்பலை அதிகரித்தல்.

02. மரமுந்திரிகைக் காணிகளின் விளைச்சலை அதிகரித்தல்.

03. மரமுந்திரிகை பயிர்ச்செய்கையில் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.

04. மனிதவள அபிவிருத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தல்.

## 8.1 இலங்கையில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை பரம்பலை மேம்படுத்தல்

### 8.1.1 விஸ்தரித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை

இலங்கையில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகள் பிரதானமாக உலர் வலயத்தில் பரவியுள்ளது. கடந்த 3 தசாப்த காலமாக நிலவிய யுத்த சூழல் காரணமாக வடக்கு, மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை காணிகள் சுமார் 30,000 ஏக்கர் அழிவடைந்தன. எனினும், 2010ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனம் அமுல்படுத்தியுள்ள விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வருடாந்தம் 5,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையைப் வியாபிக்கச் செய்ய முடிந்துள்ளது.

திறைசேரி நிதியத்தின்கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள விஸ்தரித்தல் நிவாரண உதவி நகிழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஒட்டு மற்றும் விதை மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை வருடாந்தம் 3,500 ஏக்கர் வீதம் அடுத்துவரும் 03 வருடங்களில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், வீட்டுத் தோட்டத்தின் கீழ் வருடாந்தம் சுமார் 1,000 ஏக்கர்களில் பயிர்ச்செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.1.2 பயிர்ச்செய்கைகளைப் புனரமைத்தல்

கூட்டுத்தாபன தோட்டங்களில் புதிய பயிர்ச்செய்கை மற்றும் பழைய பயிர்ச்செய்கைகளைப் புனரமைப்புச் செய்வது 2011ஆம் ஆண்டு முதல்

ஆரம்பிக்கப்பட்டது. இதன்கீழ் வட மாகாணத்தில் கொண்டச்சி தோட்டம், பூநகரித் தோட்டம், வெல்லளங்குளம் தோட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் மாண்கர்தி தோட்டம், திரியாய தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் புனரமைப்புச் செய்வதற்குமான பணிகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

### 8.1.3 புதிய பயிர்ச்செய்கை

இலங்கை மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான காணி உரிமையாளர்களுக்கு உரித்தான மரமுந்திரிகை பயிர்ச்செய்கைகளில் புதிய பயிர்ச்செய்கையாக வருடாந்தம் சுமார் 500 ஏக்கர் மேற்கொள்ளப்படுவதுடன், அடுத்துவரும் 03 வருடங்களில் இந்தப் பயிர்ச்செய்கை போக்கு தொடர்ச்சியாக அமுலில் இருக்கும். மேலுள்ள சகல பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் குறைந்தபட்சம் வருடாந்தம் 5,000 ஏக்கர் மூலம் மரமுந்திரிகை பயிர்நிலங்களின் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு 11 பிராந்திய அலுவலகங்களை உள்ளடக்கிய விஸ்தரித்தல் சேவை வலயமைப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், 20 மாவட்டங்களில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 8.1.4 அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு மரமுந்திரிகை செடிகளைப் பெற்றுக்கொடுத்தல்

2022ஆம் ஆண்டில் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, காம்பு, வெற்றிலை உள்ளடங்களாக சிறிய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி அனுசரணையின்கீழ் ‘‘ஏற்றுமதி சார்ந்த மரமுந்திரிகை கொத்தணி கிராமம் கருத்திட்டம்’’ திட்டத்தின்கீழ் ஒட்டு மரமுந்திரிகைச் செடிகள் 34,591 குருநாகல், வவுனியா, கம்பஹா, மொனராகலை மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சுமார் 494 ஏக்கர் நிலப்பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காகப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே இவ்வாறான அபிவிருத்திக் கருத்திட்டங்களை அடுத்துவரும் ஆண்டுகளிலும் அமுல்படுத்துவதன் மூலம் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் பரம்பலை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாக உள்ளது.

### 8.2 மரமுந்திரிகை பயிர்ச்செய்கை காணிகளின் விளைச்சலை மேம்படுத்தல்

இலங்கையில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைப் பரம்பல் சுமார் 38,853 ஏக்கர்களாக உள்ளதுடன், இவற்றில் சுமார் 80 சதவீதமானவை சிறிய காணி உரிமையாளர்களுக்கு உரித்தானவையாகும். பெரும்பாலான காணிகளில் விதை மரமுந்திரிகை மரங்கள் பயிரப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபன தோட்டங்களிலும் இந்தக் காணிகளினுள்ளும் மரமுந்திரிகைக் கன்றுகள் 20 - 35 வருடங்களைக் கொண்டதாக உள்ளதுடன், ஒரு மரத்தில் இருந்து 3–5 கிலோகிராம் அளவான தோலுடனான மரமுந்திரிகை கிடைக்கின்றது. மேம்படுத்தப்பட்ட புதிய மரமுந்திரிகை வகைகளை உள்ளடக்கிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகள் காணப்படுகின்ற வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளினல் ஒரு மரத்தில் இருந்து 10–15 கிலோகிராம் அளவான விளைச்சல் கிடைக்கின்றது. இதற்கமைய பயிர்ச்செய்கையின் விளைச்சலை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் பின்வரும் நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகின்றது:

#### 8.2.1 புதிய வகைகளை அறிமுகம் செய்தல்

இதற்கமைய கூடுதலான அறுவடையைப் பெற்றுத்தருகின்ற மேம்படுத்தப்பட்ட புதிய 11 வகைகள் கூட்டுத்தாபனத்தினால் விவசாயகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. வடமேல் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்டத்துடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், WUCC 01, WUCC 02, WUCC 05, WUCC 07, WUCC 08, WUCC 09, WUCC 13, WUCC 16, WUCC 19, WUCC 21, WUCC 23 ஆகிய 11 வகைகள் இளவன்குளம், விலச்சிய, நாலந்த, மகாஓயா மற்றும் சுதுவதுர ஆர ஆகிய விதை தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டுள்ளன. இந்த தாய் மரங்களில் இருந்து கிளைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு நாட்டின் பல்வேறு காலநிலை பிராந்தியங்களுக்கும் பொருத்தமான புதிய வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வருடாந்தம் புதிதாக இரண்டு வகைகளை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதன்மூலம் ஒரு ஹெக்டேயாருக்குக் கிடைக்கின்ற அறுவடையை 1,000 கிலோகிராமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 8.2.2 சிறந்த விவசாய முறையியல்களை பயன்படுத்துதல்

மிகக் குறைவான விளைச்சலை பெற்றுத்தருகின்ற விதை மரமுந்திரிகை மரங்களை அகற்றி மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு சிறிய காணி உரிமையாளர்கள் வருடாந்தம் வழிப்படுத்தப்படுகின்றார்கள். சிறந்த விவசாய முறையியல்களைப்

பயன்படுத்துவதன் மூலம் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் அறுவடைசார் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பங்கேற்புடன் விவசாயிகளை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை அடுத்துவரும் 3 வருடங்களில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்புல ஊடகங்கள் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

மரமுந்திரிகை மரங்களில் பூக்கள் மலரும் காலப்பகுதியில் அதிக மழை வீழ்ச்சி காணப்படுவதனால் கொழுந்தை பாதிக்கும் ஒருவித நோய் பரவுகின்றது. இதன் காரணமாக மரமுந்திரிகை அறுவடை 30% - 40% அளவு குறைவடைகின்றது. இதற்காக சிறிய தோட்ட காணி உரிமையாளர்களை வழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமாக உள்ளது. திறமைமிக்க பழமை வாய்ந்த மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையில் காணப்படுகின்ற பூச்சிகளின் பாதிப்பை கட்டுப்படுத்துவற்காக ஆராய்ச்சிப் பிரிவுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதுடன், இதனை அடுத்துவரும் 3 வருடங்களுக்கு அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.2.3 மத்திய நாற்று மேடை

கூட்டுத்தாபனத்தின் மத்திய நாற்றுமேடை மிகிந்தலை, தம்புள்ளை, கமன்தலுவ (தோட்டம்), மஹியங்கனை, கும்புக்கனை, காடி (தோட்டம), மங்களகம மற்றும் சந்திரிக்காவெவ ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நாற்றுமேடைகள் மூலம் புதிய இனங்களைக்கொண்ட உயர் தரமான ஒட்டுச் செடிகள் கூட்டுத்தாபன அலுவலர்களின் கண்காணிப்பின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. வருடாந்தம் சுமார் நான்கு இலட்சம் ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், இந்த நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செடிகளின் அளவை உற்பத்தி செய்ய முடியவில்லையாயினும், அடுத்து வரும் 3 வருடங்களில் வருடாந்தம் நான்கு இலட்சம் செடிகள் வீதம் உற்பத்தி செய்வது நோக்கமாகக் கொண்டுள்ளது. செடிகளை உற்பத்தி செய்யும்போது புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் மேம்படுத்துப்படும்.

## 8.3 மரமுந்திரிகை பயிர்ச்செய்கையின் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரமுந்திரிகைப் பருப்பு, சுவையான தன்மை, தரமான தன்மையைக் கொண்டிருந்தல், பெரியதாக இருத்தல், தனித்துவமான நிறத்தைக் கொண்டிருப்பதனால் உலக சந்தையில் அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது. எனினும், வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற தோலுடனான மரமுந்திரிகை 10000-12000 மெற்றிக்தொன் அளவு வருடாந்த அறுவடை மூலம் இந்த எற்றுமதிக் -

கொள்ளளவை துரிதமாக மேம்படுத்துவது கடினமாக மாறியுள்ளது. உள்நாட்டு மரமுந்திரிகைப் பருப்பு நுகர்வும் அதிகரித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக மரமுந்திரிகைப் பருப்பு ஒரு கிலோகிராமை உற்பத்தி செய்வதற்கான செலவினம் அதிகரித்துள்ளதனால் மரமுந்திரிகைப் பருப்பு ஒரு கிலோகிராமின் விலை ரூபா 5000 இற்கும் ரூபா 6000 ரூபாவுக்கும் இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்த விடயங்களைக் கவனத்திற்கொண்டு மரமுந்திரிகைப் பருப்பு உற்பத்தியின் தரம் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

### 8.3.1 சிறந்த உற்பத்தி முறையியல்களைப் பயன்படுத்தல்

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 135(ஆ) பிரிவுக்கு அமைய நிறுவனம் குறித்த பயன்கள் திட்டத்திற்கு ஆரம்ப மீதி முதல் இறுதி மீதி வரை ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பித்திருக்கவில்லை. கூட்டுத்தாபனம் அதன் நடைமுறை சேவைகள் செலவினம், வட்டி வருமானம் அல்லது செலவினம், மீளாய்வு ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் மற்றும் ஆயுட் காலப் பயன் இலாபம் /நட்டம் போன்ற விடயங்களை தனித்தனியாகக் குறிப்பிடுதல் வேண்டுமாயினும், நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறித்த பயன்கள் திட்டத்திற்குரிய குறிப்புக்கள் அதன் கூட்டுத்தொகை ஆண்டுக்கான செலவினமாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்தின் கடன் அறவிட்டுக் கொள்ளும் காலஎல்லை 60 நாட்களாக உள்ள போதும், 90 நாட்களையும் விஞ்சியுள்ள வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூபா 2,994,271/= ஆகும். மேற்படி மீதியில் இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற கொழும்பு பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிடம் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,499,410/= ஆன கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அப்போது காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ரூபா 9,466,200/= ஆன மரமுந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ளன. மேற்படி அமைச்சு தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இக்கடனை அறவிட்டுக் கொள்ளும் ஆற்றல் இல்லை என்பது அவதானிப்புச் செய்யப்படுகின்றது.

(ஐ) 01 வருடத்திற்கு மேற்பட்ட வேறு கடன்பட்டோர் பெறுமதி ரூபா 18,857,611/= ஆயினும், வேறு கடன்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட இழப்பீட்டு நட்டம் ரூபா 2,106,184/= ஆகும். 2018 ஆம் ஆண்டு முதல் வேறு கடன்பட்டோருக்கு இழப்பீட்டு நட்டமாக ஒவ்வொரு வருடமும் ஒரே பெறுமதி பேணிவரப்பட்டுள்ள போதிலும், மேற்படி பெறுமதியை வருடாந்தம் இற்றைப்படுத்தல் அல்லது பெறுமதியை பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 02 வருடங்களுக்கு மேற்பட்ட வர்த்தகக் கடன்பட்டோர் மீதியான இரண்டு நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 102,830 ஆன தொகையும் இந்த இழப்பீட்டு நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஒ) கூட்டுத்தாபனம் புத்தளம் மாவட்டத்தில் எழுவங்குளம் தோட்டத்தில் 2000 ஆம் ஆண்டு பயிர் செய்திருந்த தேக்கு மரங்களில் 2022 ஆம் ஆண்டளவில் பலகை பெறுவதற்குரிய நிலைமை வரை வளர்ந்திருந்த மரங்களின் எண்ணிக்கை 3350

ஆயினும், மேற்படி மரங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 கூட்டுத்தாபனத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்குப் பெற்றுத் தர எதிர்பார்க்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாதுள்ள தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றன. குறித்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்கள் மூலம் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது பற்றி எந்தவொரு வகையிலுமான உறுதிப்படுத்தலையோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வு சம்பந்தமான எனது பொறுப்பாக இருப்பது மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதகமான பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பெருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதன் குறிப்பிடத்தக்களவில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில் சீராக்கல் செய்வதற்காக நிருவாகத் தரப்பினருக்கு மேற்படி விடயங்களை அறிவித்தல் வேண்டும். மேலும் சீராக்கல் செய்யப்படாத தவறுகள் குறிப்பிடப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் நான் எதிர்காலத்தில் பாராளுமன்ற சபாபீடத்தில் வைக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிருவாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை நிதிசார் தரநியமங்களுக்கு தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயார் செய்யும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியாக பேணிவரும் ஆற்றலை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத பட்சத்தில் நடவடிக்கைகளை நிறுத்திவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் இன்றேல் தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குப் பதிவு மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரிசோதிக்கும் பொறுப்பை நிருவகிக்கும் தரப்பினர் ஏற்றுக் கொள்வார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை

அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய பொருண்மையான உறுதியற்ற நிலைமை உள்ளதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்திக் கொள்வதன் ஏற்புடையதன்மை தீர்மானம் செய்யப்பட்டது. பொருண்மையான உறுதியற்ற

நிலைமை காணப்படுவதாக நான் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில் நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியளவிலானதாக இல்லை எனின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் நிறைவு செய்யப்பட முடியும்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை கூட்டுத்தாபனம் பேணிவந்திருந்தது என்பது,

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனம் சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன என்பது,

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது,

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டம் | 2011 ஆண்டு முதல் வருமான வரி செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி அறிக்கைகளை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவிலலை. எனினும் நிதிக் கூற்றுக்களில் மேற்படி கால எல்லை தொடர்பாக ரூபா 779,483/= ஆன தடுத்து வைக்கப்பட்ட வரி கிடைக்க வேண்டிய மீதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18 ஆம் பிரிவு | விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் முப்பது நாட்களுக்குள் கணக்காய்வுக் கட்டணத்தை தீர்த்துவைத்தல் வேண்டுமாயினும், 2023 யூன் மாதம் 23 ஆம் திகதிக்கு கணக்காய்வுக் கட்டணமான ரூபா 930,000/= ஆன தொகையை தீர்த்துவைக்க நடவடிக்கை மற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதி ஒழுங்குவிதிகள் 105 மற்றும் 106 | காசு, காசோலை போன்றன காணாமற் போன சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற உண்மையான நட்டத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அவ்வாறு காணாமற் போன நிதிக்குப் பொறுப்பான அலுவலரிடம் உடனடியாக அறவிட்டுக் கொள்ளல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் 2022 யூன் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக நிதிப் பரிசோதனையின் போது ரூபா 126,092 ஆன தொகை குறைபாட்டை அறவிட்டுக் கொள்ள இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்ப ட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2012 யூலை 24 ஆம் திகதிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தீர்மானம் | கூட்டுத்தாபனத்திற்கு சட்டபூர்வமான உரித்து இல்லாத காணிகளை சட்டபூர்வமான சாட்டுதல் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அறிவித்துள்ள போதிலும், 2012.07.24 ஆம் திகதிக்கு முன்னர் மற்றும் அத்திகதியின் பின்னர் கூட்டுத்தாபனம் ஆட்சியுரிமையைக் கொண்டுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள 11363 ஏக்கர் அளவான காணிகளின் சட்டபூர்வமான உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு சாட்டுதல் செய்துகொள்வதற்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் மாம் 16 ஆம் திகதிய PED/01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அரச தொழில்முயற்சிகளுக்கான நல்லாட்சிக்காக வெளியிடப்பட்ட கையேட்டின் 66 ஆம் பந்தி | நிதி ஆண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி சகிதம் நேர்வரிசை அமைச்சுக்கும், திறைசேரியின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தின் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 2023 செப்தெம்பர் 12 ஆம் திகதியாகும். |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

(அ) கொண்டச்சி தோட்டத்தை புனரமைப்புச் செய்வதன் கீழ் யானை வேலி நிர்மாணித்தல், டிரக்டர் மற்றும் நீர் பவுசர் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடம் நிர்மாணித்தல் ஆகிய பிரதான பணிகளுக்கு கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் அமைச்சிடம் கிடைத்த ரூபா 225,000,000 ஆன தொகையில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை கூட்டுத்தாபனம் தோளுடனான மரமுந்திரிகை கொள்வனவு செய்ய ரூபா 9,000,000/= ஐப் பயன்படுத்தியிருந்தது.

## 2.3 வேறு விடயங்கள்

(அ) கூட்டுத்தாபனத்தை தாபிப்பதற்காக வெளியிடப்பட்ட 60/7 ஆம் இலக்க 1973 மே மாதம் 25 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் முதலாவது அட்டவணையில் (அ), (ஆ), (இ), (ஈ), (ஊ) மற்றும் (ஏ) ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக 2013 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மிகக் குறைவாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதாவது அமைச்சருக்கு அறிவுரை வழங்குதல், மரமுந்திரிகை உற்பத்தியை பதனிடல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதியை மேம்படுத்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகம் தொடர்பாக வெளித் தரப்பினர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல், ஆராய்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) தோளுடனான மரமுந்திரிகை, மரமுந்திரிகை பருப்பு மற்றும் கன்றுகளுக்கான அலகுச் செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது சரியான ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையியல் தாபிக்கப்பட்டிருக்காமை காரணமாக கணக்கு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 72,093,677/= ஆன இறுதி இருப்புப் பெறுமதியின் உண்மைத் தன்மையை பரிசீலிக்க முடியவில்லை.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 14,471,411 ஆன இலாபம் உழைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக மீளாய்வு ஆண்டில் மீண்டெழும் கொடை ரூபா 12,700,000 மற்றும் வருமானமாக இனங்காணப்பட்ட மூலதனக் கொடை ரூபா 11,085,762 ஆன தொகையினால் அதிகரித்துள்ளமை, மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி தோட்டத்தில் உப பயிர்செய்கை மூலம் வருடத்தில் ரூபா 6,437,392 ஆன வருமானம் கிடைத்தமை காரணமாக அமைந்துள்ள போதும், ஆண்டினுள் மரமுந்திரிகை உற்பத்திகளின் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 3.1 வீதம் குறைவடைந்துள்ளமை அவதானிப்புச் செய்யப்பட்டுள்ளது. அண்மித்த 05 வருடங்களில் அதாவது 2018 முதல் 2022 வரையான காலப்பகுதிக்குள் அரச கொடைகளை பொருட்படுத்தாது கடந்த 05 வருட காலப்பகுதியில் கூட்டுத்தாபன நிதிக் கூற்றுக்களில் கற்புல நட்டம் ரூபா மில்லியன் 134.8 முதல் ரூபா மில்லியன் 102.3 வரை பரந்துள்ளது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டம், பதவியணி வெற்றிடங்கள், காணப்படுகின்ற மரமுந்திரிகை தோட்டங்கள் உச்சளவில் பயிர் செய்யப்படாமை காரணமாக உற்பத்தி குறைவடைதல் போன்ற காரணங்களினால் அரசின் கொடை இன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் சவாலாக மாறியுள்ளது என்பது அவதானிப்புச் செய்யப்படுகின்றது. விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | இலாபம் (நட்டம்) | அரச கொடை (மீண்டெழும்) | அரச கொடை (மூலதனம்) | வருமானமாக இனங்காணப்பட்ட அரச கொடை (மூலதனம்) | அரச கொடையை தவிர்த்து நட்டம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | 1 | 2 | 3 | 4 | 1-2-4 |
| 2018 | (39,642,728) | 50,000,000 | 66,520,000 | 35,263,122 | (124,905,850) |
| 2019 | (30,185,251) | 60,000,000 | 70,000,000 | 44,615,174 | (134,800,425) |
| 2020 | (10,885,647) | 60,000,000 | 84,650,000 | 31,426,876 | (102,312,533) |
| 2021 | (16,412,185) | 64,800,000 | 64,000,000 | 31,701,078 | (112,913,263) |
| 2022 | 14,471,411 | 77,500,000 | 29,000,000 | 42,786,840 | (105,815,429) |

(உ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வங்கி நடைமுறை கணக்குகள் 06 உம் சேமிப்புக் கணக்குகள் 05 உம் காணப்பட்டதுடன், இவற்றில் 02 நடைமுறைக் கணக்குகள் மற்றும் 03 சேமிப்புக் கணக்குகள் நீண்டகாலமாக செயற்படாமை காரணமாக அவற்றில் கூட்டுத்தொகை முறையே ரூபா 23,343/= மற்றும் ரூபா 306,966/= ஆகக் காணப்பட்டது. மேற்படி செயற்படாத கணக்குகளை மூடிவிடுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வங்கி நடைமுறை கணக்குகள் 06 உம் சேமிப்புக் கணக்குகள் 05 உம் காணப்பட்டதுடன், இவற்றில் 02 நடைமுறைக் கணக்குகள் மற்றும் 03 சேமிப்புக் கணக்குகள் நீண்டகாலமாக செயற்படாமை காரணமாக அவற்றில் கூட்டுத்தொகை முறையே ரூபா 23,343/= மற்றும் ரூபா 306,966/= ஆகக் காணப்பட்டது. மேற்படி செயற்படாத கணக்குகளை மூடிவிடுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தொழில் சங்க மற்றும் நலன்புரிப் பங்களிப்புத் தொகையாக சம்பளத்திலிருந்து குறைக்கப்பட்ட ரூபா 1,807,121/= ஆன பங்களிப்புத் தொகைகள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மேற்படி சங்கங்களுக்கு செலுத்தாது கூட்டுத்தாபனத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தாபன ஊழியர்களுக்காக பேணிவரப்படுகின்ற காப்புறுதி மூலம் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள அவர்களின் மருத்துவப் பட்டியல்கள் மீள்நிரப்புச் செய்யப்பட்டு 2 வருடங்களுக்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,300,431/= மற்றும் ஒரு வருடத்திற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,653,907/= என்ற வகையில் கூட்டுத்தொகை ரூபா 3,954,338/= இனை உரிய பயனாளிகளுக்குச் செலுத்தாது செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) அப்போது காணப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் தலையீட்டுடன் தோளுடனான மரமுந்திரிகை கொள்வனவு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு மீளச் செலுத்தும் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் பெற்றுக் கொண்ட ரூபா 3,500,000/= மற்றும் அதற்கான வட்டி ரூபா 927,500/= ஆன தொகையை மீளாய்வு ஆண்டு வரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான /வசம் உள்ள 13 தோட்டங்களின் காணிகளின் அளவு 11363 ஏக்கர்கள் ஆகும் என்பதுடன், இவற்றில் 3449 ஏக்கர் மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மரமுந்திரிகை பயிர் செய்யப்படாத காணிகளின் விகிதம் 70% ஆகும். இககாணிகளில் பயிர்செய்கை மேற்கொள்வதற்கு விளைதிறன்மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொண்டுள்ள காணிகளில் 3449 ஏக்கர்களில் ஒட்டு மரமுந்திரிகை பயிர்கள் ஒரு ஏக்கருக்கு 70 உம், விதை மரமுந்திரிகை மரங்கள் ஒரு ஏக்கருக்கு 40 உம் என்ற வகையில் பயிர்செய்யப்பட்டதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை விளைச்சல் மெ.தொ. 88.24 ஆகக் காணப்பட்டதனால் ஒரு ஏக்கருக்கான விளைச்சல் மரமுந்திரிகை கிலோ

கிறாம் 25.38 ஆன குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் மேற்படி தோட்டங்களில் காய்க்கும் மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 51685 ஆக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய ஒரு மரமுந்திரிகை மரத்தின் சராசரி அறுவடை கிலோ கிறாம் 1.71 ஆன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(ஓ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான புத்தளம் கமன்தலுவ மற்றும் அம்பாறை ஹாடி தோட்டங்களில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை முறையே 3358 மற்றும் 826 ஆகக் காணப்பட்டதுடன், முதிர்ச்சியடையாதவை 1147, விளைச்சல் பெறுபவை 2391 மற்றும் காய்காதவை 646 என்ற வகையில் இவை காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் தேங்காய் அறுவடை 90304 காய்களாகக் காணப்பட்டதுடன், அதன் விற்பனை வருமானம் ரூபா. 4,427,439/= ஆகக் காணப்பட்டது. அதற்கமைய ஒரு மரத்தின் வருடாந்த தேங்காய் விளைச்சல் 38 காய்களாகும் என்பதுடன், விற்பனை வருமானம் ரூபா. 1,863/= ஆகக் குறைவடைந்தமைக்கு தென்னை மரங்களின் பராமரிப்பு மற்றும் உரம் இடுவதன் பலவீமான நிலைமைகள் காரணமாக அமைந்தன.

(ஔ) 2022 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தின் தோளுடனான மரமுந்திரிகை உற்பத்தி மெ.தொ. 88.24 ஆகக் காணப்பட்டது. ஒரு கிலோ கிறாமுக்கு தோளுடனான மரமுந்திரிகை காய்கள் சுமார் 125 அவசியமாகின்றன. அதற்கமைய வருடாந்தம் மரமுந்திரிகைப் பழங்கள் சுமார் 11,030,000 விளைச்சல் கிடைப்பதுடன், அவற்றின் நிறை சுமார் கிலோ கிறாம் 1,103,000 ஆகும். மேலும் மரமுந்திரிகை உற்பத்தியின் பின்னர் உற்பத்தியில் 75 சதவீதம் மரமுந்திரிகைத் தோளாக சுமார் 59.415 மெ.தொ. அகற்றப்படுகின்றன. இவ்வாறு கழிவாக அகற்றும் மரமுந்திரிகை பழங்கள் மற்றும் மரமுந்திரிகை தோள் மூலம் உப உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது மேற்படி உற்பத்திக் கைத்தொழிலின் கைத்தொழிலாளர்களை தேடிக்கண்டுபிடித்து விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 03 வாகனங்கள், 02 லொறிகள் ஒரு டிரக்டர், 02 மோட்டார் சைக்கில்கள் 2023 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையும் புதுப்பிக்கப்படாது கராஜ்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ச) புத்தளம் பதனிடல் நிலையத்தின் பௌதீக நிலைமையை பரிசோதித்த போது ரூ.மி. 7.092 செலவிடப்பட்டு மரமுந்திரிகை தன்னியக்க பதனிடலுக்காக கொள்வனவு செய்த இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஜ) நெதகமுவ பதனிடல் நிலையத்தில் காணப்படுகின்ற மின் பிறப்பாக்கி இயந்திரம், பொய்லர், மரமுந்திரிகை தோள் மூலம் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் புத்தளம் பதனிடல் நிலையத்தில் காணப்படுகின்ற பொய்லர்

செயலிழந்துள்ளதுடன் அவற்றைப் புதுப்பித்துப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஞ) நெதகமுவ பதனிடல் நிலையத்தில் மரமுந்திரிகை பதனிடல் பொய்லர் செயலிழந்துள்ளதுடன், மரமுந்திரிகை அவித்தல் செயன்முறை தடைப்பட்டதன் காரணமாக தோளுடனான மரமுந்திரிகை அவிக்கப்பட்டு 90%-95% இடையிலான அளவைப் பெற்றுக் கொள்வதற்குள்ள உற்பத்தி விளைதிறன் 70%-80% இற்கு இடைப்பட்ட அளவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக மரமுந்திரிகை பருப்பு விற்பனை மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த வருமானம் 15%-20% இடைப்பட்ட அளவு இழக்கப்பட்டுள்ளது.

(த) நெதகமுவ மரமுந்திரிகை பதனிடல் நிலையத்தின் தரப்படுத்தல் மற்றும் பொதியிடல் பிரிவுக்கு 2021 ஆம் ஆண்டு ரூபா 8,100,000/= ஆன தொகை செலவிடப்பட்டுள்ள ஒரு நிமிடத்திற்கு 60 பக்கட் பொதியிடக்கூடிய தன்னியக்க பொதியிடல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் பொதியிடப்பட்ட பக்கட்களின் எண்ணிக்கை 62265 ஆகும் என்பதுடன், இந்த இயந்திரத்தின் கொள்ளளவு உச்சளவாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ந) நெதகமுவ மரமுந்திரிகை பதனிடல் நிலையத்தில் தோளுடனான மரமுந்திரிகை களஞ்சியம் பல வருட காலமாக சுத்தம் செய்யப்படாதுள்ளதுடன், களஞ்சியத்தில் தோளுடனான மரமுந்திரிகை களஞ்சியப்படுத்தும் போது தோளுடனான மரமுந்திரிகைக்கு காற்றோட்டம் கிடைக்கும் வகையில் கயிறு மூலமான பை அல்லது வலைப் பையைப் பயன்படுத்தாது பொலிசெக்ஸ் வகையிலான பைகளைப் பயன்படுத்துவதன் காரணமாக சிறந்த நிலையில் உள்ள தோளுடனான மரமுந்திரிகை அழிவடைந்திருந்தன.

(ப) கரும்பு, சோளம், மரமுந்திரியை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர் செய்கைகள் அபிவிருத்திசார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு அரசாங்க நிறுவனத்தினால் மன்னார் கொண்டச்சி தோட்டத்தை மீளத் தாபிக்கும் கருத்திட்டத்திற்கு 03 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 225,000,000/= வழங்கப்பட்டுள்ளதுடன், 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் மேற்படி கருத்திட்டங்களை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2022.12.31ஆம் திகதியளவில் ரூபா 78,761,352/= ஆன தொகை செலவிடப்பட்டு மீதியான ரூபா 137,236,648/= ஆன தொகை செயற்படாததாகக் காணப்பட்டது.

(ம) மன்னார் கொண்டச்சி தோட்டக் கருத்திட்டத்திற்கு மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டு இறுதியளவில் ரூபா 28,209,434 ஆன தொகை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டுள்ள போதிலும் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை

மின்சாரம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் அதற்கான கட்டிடங்கள் மின்சாரக் கட்டமைப்பை தயாா்படுத்தும் நடவடிக்கைகள், வயரின் செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ய) நிலையப் பொறுப்பு அலுவலர்களுக்கான உத்தியோகபுரீர்வ இல்லங்களை நிர்மாணிக்க கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர்செய்கைகள் அபிவிருத்திக் கைத்தொழில் சார்ந்த ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் ரூபா 15,653,000/= ஆன தொகை ஒதுக்கம் செய்யப்பட்டு 07 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு பூரணமாக நிர்மாணித்து முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ர) மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் மரமுந்திரிகை பயிர் செய்யப்பட்டிருந்த நிலத்தின் அளவு சுமார் 3449 ஏக்கர்களாக காணப்பட்டன. மேற்படி மரங்களில் பதிவழிப்புச் செய்யப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 24,159,359/= ஆக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மரமுந்திரிகை மரம் கணிப்பெடுப்பை மேற்கொள்ளல், மரங்களை இலக்கமிடல் மற்றும் மரங்கள் பற்றிய பதிவேட்டை தயார் செய்வது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**கையொப்பம் / டபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 12. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீராக்கல் மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் 2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிகூற்றுக்கள் மற்றும் வேறுசட்ட ஒழுங்குறுத்தல்கள் தேவைப்பாடுகள் பற்றி 2018இன் 19ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12ஆம் பிரிவுக்கு அமைய வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபன தரப்பினர்களின் விளக்கமளித்தல்.**

1.2 (அ)இணங்குகின்றேன்.

உரிய தரப்பினர்களிடம் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு பிற்போடப்பட்ட வரியை சரியாகக் கணிப்பீடு செய்து அதுதொடர்பான சீராக்கல்கள் அடுத்த ஆண்டின்நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கி சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 (ஆ) இணங்குகின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையாகத் தேய்வடைந்த அல்லது பெறுமதி பூச்சியமாகக் காணப்படுகின்ற கட்புலனாகும் நடைமுறையல்லாத சொத்துக்கள் (ஆதனம், பொறி, உபகரணம் உள்ளடங்களாக கூட்டுத்தாபனத்தின் அனைத்து கட்புலனாகும் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியை மீள மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பிரதானமாக கூட்டுத்தாபனத்தின் மோட்டார் வாகனங்களின் பெறுமதியை மீளமதிப்பீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் கிடைத்துள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்கமைய அதன் ஆரம்பகட்டமாக இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரையும் உள்ளடக்கி முறையாக நியமனம் செய்யப்பட்ட குழுவின்மூலம் 2024.02.20 ஆம் திகதி இந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைமையலுவலக குழுமத்தில் காணப்படுகின்ற சகல மோட்டார் வாகனங்களையும் மீள் மதிப்பீடுசெய்யும் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. எஞ்சிய மோட்டார் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் 2024.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவுசெய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறே மோட்டர் வாகனங்கள் தவிர, ஏனைய கட்புலனாகும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பில் முறையாக ஆய்வை மேற்கொண்டு உரிய தகவல்களை சேகரித்து அந்தச் சொத்துக்களின்

பெறுமதியை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 (இ) இணங்குகின்றேன்.

மேலே இலக்கம் 1.2(ஆ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூகூட்டுத்தாபனத்ததின் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்களின் பருமட்டான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஏற்புடையவாறு வெளிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகீன்றன.

1.2 (ஈ) இணங்குகின்றேன்.

இந்த கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்க மீதிக்கு இசைவாக மாதாந்தம் ரூபா 100,000 வீதமான முதலீட்டை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன், அதற்கு திறைசேரியின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டதையடுத்து, அத்திணைக்களத்தினால் குறித்த கடிதம், விடயம்பொறுப்பு கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ளடங்கும் விடயங்களுக்கு உரிய அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளதுடன், இதற்கமைய தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.2 (உ) இணங்குவதில்லை..

இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் சீராக்கல்கள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றமடைந்ததாகக் கருதி நடப்பு ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன. ஆதற்கமைய மீளாய்வாண்டில்இலாபம் 646,579 இனால் அதிகரித்துள்ளதென்று மேற்கொள்ளப்பட்டுள்ள விடய விளக்கங்களுக்கு அமைய ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

1.2 (ஊ) இணங்குகின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள பயன்கள் திட்டத்துக்கு தனித்தனியாக

சமர்ப்பிக்க வேண்டிய தகவல்கள் 2023 ஆம் ஆண்டு முதல் உரிய கணக்கீட்டு தர நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1.2 (எ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரண கால எல்லையை விஞ்சிய ரூபா 2,994,271 ஆன வர்த்தக கடன்பட்டோர் மீதிகளில் 2023.12.31 ஆம் திகதியளவில் ரூபா 1,296,771 ஆன தொகையை அறவிட்டுக்கொள்ள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே இந்த கணக்காய்வு அவதானிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்படி வர்த்தக கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,499,410 ஆன கடன்பட்டோர் (லிசல என்டபிரைசஸ் நிறுவனம்) அறவிட்டுக்கொள்ள நீண்டகாலமாக மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததனால் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி கடன்பட்டோர் நிலுவையை ஆரம்பித்துக்கொள்ள தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்படி கடன் கொடுக்கல் வாங்கலின் தகவல்களை உள்ளடக்கிய கோப்பு விடயப்பொறுப்பு அமைச்சின் சட்ட அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கிடைத்த அறிவுரைகளின் பெயரில் இந்தக் கடன்பட்ட நிறுவனத்துக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளில் பிரவேசிக்க தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.2 (ஏ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 9,466,200 ஆன கடன் பெறுமதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் அறவிட்டுக்கொள்ள கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்தது. இந்தக் கடன் பெறுமதி தொடர்பாக 2023.06.15 ஆம் திகதி நடைபெற்ற கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தற்போது செயற்படாதுள்ள அரசாங்க அமைச்சு ஒன்றிடமிருந்து கிடைக்க வேண்டியதாகவுள்ள இந்தக் கடன் தொகை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முறைபற்றி ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்ப இதன்போது சிபாரிசு செய்யப்பட்டதுடன், இது தொடர்பாக கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையை விழிப்புணர்வூட்டி குறித்த கடிதத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலே

குறிப்பிடப்பட்ட கடிதத்துக்கு அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் கிடைத்த பதில் கடிதம் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2023.12.22 ஆம் திகதி நடைபெற்ற கூட்டுத்தாபன கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கமைய இந்தக் கடன்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு தொடர்ந்தும் ஆலோசனைகளைப் கோருவதற்காக இவ்வாறான தற்போது இயங்கிவராத அரசாங்க அமைச்சுக்களின் சொத்துக்களைச் சாட்டுதல் செய்யப்பட்ட அரசாங்க அமைச்சான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டதையடுத்து, மேற்படி கடிதம் உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்துக்கு கிடைக்கும் பதிலுக்கு அமைய தேவயையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.2 (ஒ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது கூட்டுத்தாபனத்துக்கு அறிவிடப்பட வேண்டி காணப்படுகின்ற போதிலும் இழப்புகளை ஏற்படுத்தும் நட்ட ஒதுக்கீடு செய்யப்படாதுள்ள பொருள்சார் கடன்பட்டோர் மீதி தொடர்பாகவும் கவனம் செலுத்தி தற்போது இழப்பை ஏற்படுத்தும் நட்டங்களுக்கான ஒதுக்கங்கள் தொடர்பில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், மேற்படி சீராக்கல்கள் 2023 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உரியவாறு கணக்குகளில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறே இந்தக் கணக்காய்வு அவதானிப்பில் தொடர்ந்தும் காணப்படுகின்ற ரூபா 102,830 ஆன பெறுமதியைக் கொண்ட நீண்ட காலமாக அறவிட்டுக்கொள்ள முடியாது காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளை கணக்கு பதிவேடுகளில் இருந்து பதிவளிப்புச் செய்வதற்கு பணிப்பாளர் சபையின் சிபாரிசின் கீழ் அங்கீகாரம் கோரி அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்துக்கு குறிப்பிடத்தக்க காலத்துக்கு முன்னரே கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

1.2 (ஓ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எளுவன்குளம் தோட்டத்தில் காணப்படுகின்ற தேக்கு மரங்களை விலைமதிப்புச் செய்யும் நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி விலை மதிப்பின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்வதற்காக குறித்த விலை மதிப்பு அறிக்கை அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எளுவன்குளம் தோட்டத்தின் சட்ட ரீதியான உரித்தை கூட்டுத்தாபனத்துக்குச் சாட்டுதல்

செய்யும் நடவடிக்கைகள் இதுவரை நிறைவு செய்யப்படாதுள்ளதனால் மேற்படி தேக்கு மரங்களின் விலை மதிப்புப் பெறுமதியை கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பதிவேடுகளில் உட்புகுத்துவதற்கான ஆற்றல் இல்லை. குறித்த தோட்டத்தின் சட்ட ரீதியான உரித்தை சாட்டுதல் செய்து கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது பெரும்பாலும் நிறைவடைந்திருப்பதனால் எதிர்வரும் குறுகிய காலப்பகுதிக்குள் குறித்த சீராக்கல்களை கணக்குப் பதிவேடுகளில் உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

2.2.2 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது மேற்படி வருமான வரி அறிக்கைகளைத் தயார் செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன், பல வருடங்களின் வருமான அறிக்கைகளைத் தயார் செய்து வருவதனால் அதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. அதற்கமைய கூடிய விரைவில் மேற்படி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து குறித்த அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2.2.2 (ஆ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

காணப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு தற்போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 930,000 ஆன செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களில் ரூபா 465,000 ஆன தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்குச் செலுத்த வேண்டி இருப்பதுடன், எஞ்சிய ரூபா 465,000 ஆன தொகையையும் கூடிய விரைவில் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2.2.2 (இ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 126092 ஆன தொகையின் குறைவுக்கு அப்போதைய கூட்டுத்தாபன காசுப் பொறுப்பாளர் பொறுப்புக்கூற வேண்டுமென்று நிறுவன ரீதியான உள்ளக விசாரணைக்கு அமைய கூட்டுத்தாபன நிருவாக அதிகாரசபைக்கு சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதிலும் இதற்கு முன்னரும் கணக்காய்வுக்கு எழுத்துமூலம் அறிவிப்புச் செய்துள்ளவாறு குறித்த தொகையை உரியவாறு மேற்படி காசுப் பொறுப்பாளர் நிறுவன ரீதியான விசாரணையின் பெறுபேறுகளை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அப்போதைய விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சுக்கு விளக்கமொன்றைச் சமர்ப்பித்து இருப்பதனால் இது தொடர்பாக அமைச்சு மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நினைவூட்டலின் பின்னரும் மேற்படி அமைச்சின் விசாரணையின் பெறுபேறுகள் இதுவரை இந்தக்

கூட்டுத்தாபனத்துக்கு அறிக்கையிடப்பட்டு இருக்கவில்லை என்பதனால், குறித்த விடயம் சம்பந்தமான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இவ்வாறான நிலையின்கீழ் கூட்டுத்தாபனத்தின் உள்ளக விசாரணையின் பெறுபேறுகளைக் கவனத்தில் கொண்டு அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சின் விசாரணையின் பெறுபேறுகளை தடையாக ஏற்படுத்திக்கொள்ள கூடாதென்றும் குறித்த உள்ளக விசாரணையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆரம்ப விசாரணையை நடாத்தி துரிதமாக தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்றும் பணிப்பாளர் சபைக்குச் சிபாரிசு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது உகந்தது என்றும் 2023.12.22 ஆம் திகதி நடைபெற்ற கூட்டுத்தாபனக் கணக்காய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு குழு சிபாரிசு பணிப்பாளர் சபையின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், குறித்த விடயம் தொடர்பாக மீண்டும் நினைவூட்டல் ஒன்றை அனுப்புவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்கமைய மேற்படி நினைவூட்டல் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய ஆலோசனைக் கிடைத்தவுடன் தேவையான அடுத்த கட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

2.2.2 (ஈ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

2012 யூலை மாதம் 24 ஆம் திகதிய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தீர்மானம் கிடைத்த சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட ரீதியான உரித்துச் சாட்டுதல் செய்யப்படாதிருந்த தோட்டங்கள் /விதைப் பூங்காக்களின் காணிகளது மொத்த ஏக்கர் எண்ணிக்கை 370 ஆகும். அதன் பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| தோட்டம்/ விதைப் பூங்கா | உரித்து | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | ஏக்கர்களின் அளவு |
|---|---|---|---|---|
| 1. எளுவன்குளம் - கட்டம் 1 | அரசாங்கத்துக்கு உரித்தானது | புத்தளம் | வணாத்துவில்லு | 210 |
| 2. ஆச்சிகே வத்த | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | புத்தளம் | வணாத்துவில்லு | 961 |
| 3. கமன்தளுவ | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | புத்தளம் | ரஸ்நாயக்க | 548 |
| 4. காடி | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | மட்டக்களப்பு | வாழைச்சேனை | 365 |
| 5. விலச்சிய | வன பாதுகாப்புத் திணைக்களம் | அநுராதபுரம் | மஹவெலச்சி | 25 |
| 6. சுதுவத்துர –ஆர | வன பாதுகாப்புத் திணைக்களம் | மொனராகலை | மொனராகலை | 45 |
| 7. மகாஓயா | வன பாதுகாப்புத் திணைக்களம் | அம்பாறை | மகாஓயா | 81 |
| 8. நாளாந்த (குறிப்பு) | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | மாத்தளை | மாத்தளை | 135 |
| **மொத்தம் (ஏக்கர்)** | | | | **2,370** |

குறிப்பு :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நாளாந்த விதைப் பூங்கா அமைந்துள்ள காணி முறையாக மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பெயரில் தற்போது மீண்டும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதனால் குறித்த அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்கு தீர்மானம் கிடைத்த சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்துக்கு சட்ட ரீதியான உரித்து சாட்டுதல் செய்யப்பட்டிருக்காத மற்றும் கூட்டுத்தாபனத்தால் தற்போது பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற காணிகளில் மொத்த ஏக்கரின் எண்ணிக்கை 2,235 ஆகும். (2370 – 135)

மேலும் மேற்படி அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டளவில் இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தானதாக இருக்காதபோதிலும் பிற்காலத்தில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்துள்ளதுடன், இதுவரை சட்ட ரீதியான உரித்தைச் சாட்டுதல் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படாத காணிகளின் அளவு 8,988 ஏக்கர்களாகும் என்பதுடன், அதன் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது. (நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கு அமைய)

| தோட்டம் / விதைப் பூங்கா | உரித்து | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | ஏக்கர்களின் அளவு | கூட்டுததாபனத்துக்குக் கிடைத்துள்ள ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. மாங்கேணி | அரசாங்கத்துக்குஉரித்தானது | மட்டக்களப்பு | கோரளைப்பற்று வடக்கு | 1075 | 2013 |
| 2. கொண்டச்சி | அரசாங்கத்துக்குஉரித்தானது | மன்னார் | முசலி | 6498 | 2014 |
| 3. திரியாய | அரசாங்கத்துக்குஉரித்தானது | திருகோணமலை | கோமரன்கடவல | 27 | 2017 |
| 4. எளுவன்குளம் கட்டம் II | அரசாங்கத்துக்குஉரித்தானது | புத்தளம் | வணாத்துவில்லு | 409 | 2018 |
| 5. பூநகரி | அரசாங்கத்துக்குஉரித்தானது | கிளிநொச்சி | பூநகரி | 479 | 2019 |
| 6.வெல்லன்குளம் | அரசாங்கத்துக்குஉரித்தானது | மன்னார் | மாந்தை மேற்கு | 500 | 2021 |
| **மொத்தம் (ஏக்கர்)** | | | | **8,988** | |

இதற்கமைய சட்ட ரீதியான உரிமையை சாட்டுதல் செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள ஒட்டுமொத்தக் காணிகளின் அளவு 11,223 ஏக்கர்களாகும். (2235 + 8988)

மேலே குறிப்பிட்டுள்ள பூநகரி, கொண்டச்சி, மாங்கேணி மற்றும் வெல்லங்குளம் ஆகிய தோட்டங்களில் உள்ள காணிகள் 70 ஆம் தசாப்தங்களில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தானதாகக் காணப்பட்டபோதும், 30 வருடகாலமாக வடக்கு, கிழக்கில் நிலவிய யுத்த சூழல் காரணமாக கூட்டுத்தாபனம் இழக்க நேரிட்டுள்ளதுடன், குறித்த ஆண்டுகளில் அவை கூட்டுத்தாபனத்துக்கு கிடைத்துள்ளன.

மேற்படி காணிகளின் சட்ட ரீதியான உரித்து நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குச் சாட்டுதல் செய்து கொள்வதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு அமைய அதற்கான குத்தகையாக மிக பாரிய தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிதி நிலைமைக்கு அமைய மேற்படி குத்தகைத் தொகையை செலுத்தும் ஆற்றல் இந்தக் கூட்டுத்தாபனத்தில் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட காணிகள் ஒரு காணியாக இருக்கின்ற எளுவங்குளம் கட்டம் I காணியின் உரித்தை சாட்டுதல் செய்துகொள்வதற்கான குத்தகையாக ரூபா மில்லியன் 11 இற்கும் மேற்பட்ட தொகையை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுள்ளமை அதற்கான உதாரணமாக குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

இந்த நிலைமையின்கீழ் குறித்த காணிகளின் உரித்து தற்போது உரிமையாக காணப்படுகின்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்தின் அலுவலர்களுடன் விடயப்பொறுப்பு அமைச்சின் தலையீட்டில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு/ காணி ஆணையாளர் திணைக்களம், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மற்றும் வெளி தனியார் நிறுவனம் ஆகிய தரப்பினர்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட முத்தரப்பு உடன்படிக்கையின்கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு உப குத்தகை அடிப்படையில் மேற்படி காணிகளின் நீண்டகாலக் குத்தகை உரிமையை கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சகல தகவல்களையும் உள்ளடக்கிய எண்ணக்கருப் பத்திரம் தற்போது விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய கிடைக்கும் அங்கீகாரத்துக்கமைய தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.2.2 (உ) இணங்குகின்றேன்.

பல்வேறு நடைமுறைக் காரணங்களினால் கடந்த ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் குறித்த அரச நிறுவனங்களிடமிருந்து சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்ட போதிலும் தற்போது இவ்வனைத்துத் தாமதங்களையும் தவிர்த்துக்கொண்டு 2022 ஆம் ஆண்டுவரையான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் தயார் செய்து சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.2.2 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கொண்டச்சித் தோட்டத்தில் காணப்படுகின்ற சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பேணிவரப்படும் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையில் இருந்து கிடைக்கின்ற தோலுடனான மரமுந்திரிகை அறுவடை அமைச்சரவையின் தீர்மானத்துக்கமைய இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு காணப்படுவதனால், 2022 ஆம் ஆண்டில் மேற்படி திணைக்களத்தினால் மேலே குறிப்பிடப்பட்டவாறு சேகரிக்கப்பட்டு இருந்த தோலுடனான மரமுந்திரிகை அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கு இந்த ரூபா 9,000,000 ஆன தொகை குறித்த மீள் தாபித்தல் கருத்திட்ட ஏற்பாடுகளில் இருந்து பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும் ஏற்கனவே இந்தத் தொகை மீள் தாபித்தல் கருத்திட்டத்துக்கு தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

2.3 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

**<u>1972இன் 11 ஆம் இலக்க, அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 60/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையின் (அ) பந்தி.</u>**

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை, பதனிடல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய சகல பணிகள் தொடர்பிலும் தாபிக்கப்பட்டுள்ள ஒரே அரச நிறுவனமென்ற வகையில் 60/7 ஆம் இலக்க, 1973.05.25ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய மேற்படி பணிகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்வது சம்பந்தமாக விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சருக்கு உரிய தகவல்களையும்

ஆலோசனையையும் பெற்றுக்கொடுப்பதை இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கௌரவ அமைச்சருக்கு குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவன பதவி வழிமுறையில் உயர்நிலையில் காணப்படுகின்ற நிறுவனமான விடயப்பொறுப்பு அமைச்சு ஊடாக (தற்போதைய விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு)

மேற்படி தகவல்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து கோரப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தினால் அத்தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக எழுகின்ற அவசர, விசேட மற்றும் ஏனைய விடய ரீதியான விடயங்களின்போது விடயப்பொறுப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களில் குறித்த விடயம் சம்பந்தமாக அலுவலர்கள் தமது கருத்துக்களையும் உரிய தகவல்களையும் நிபுணத்துவ கருத்துக்களையும் சமர்ப்பிக்கின்றார்கள்.

மேலும், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் தமது சம்பவக் கற்கைகளின்போது இனங்காணப்படுகின்ற அரச தலையீட்டுக்குத் தேவையான சிக்கலான விடயங்களின்போது மற்றும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் தலையிட வேண்டிய அதன் அடிப்படைக் குறிக்கோள்களுக்குப் புறம்பான விடயங்களின்போது அது பற்றி கௌரவ அமைச்சரின் கவனத்தைக் கோருவதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் செயலாளரிடமிருந்து கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு கிடைக்கின்ற அங்கீகாரத்துக்கு அமைய உரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

**1972இன் 11 ஆம் இலக்க, அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையின் (இ) பந்தி.**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் மரமுந்திரிகைப் பயிர்செய்கை, மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை சார்ந்த பரவும் நோய்கள், கிருமிநாசினி, உரம் மற்றும் மரமுந்திரிகைத் தோட்டத்துறைக்குச் சம்பந்தமான தற்போது உருவாகி உள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சிக்கல்கள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மற்றும் அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்குத் தேவையான ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான சகல ஆராய்ச்சிகளும் இந்த கூட்டுத்தாபனத்தின் தரச் சான்றிதழ்படுத்தும் அலுவலர்களின் தலையீட்டின்கீழ் கூட்டுத்தாபனத்தின் நெதகமுவ பதனிடல் நிலையத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் பெறுபேறாக பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகள் பல சந்தைக்கு அறிமுகம் செய்ய இயலுமாகி உள்ளது.

மேலும் மரமுந்திரிகைச் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் உலக சந்தையின் நிலைமைகளை ஆராய்ந்து மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு வர்த்தகக் குறியீடொன்றையும் (Trade mark) சுலோகத்தையும் (Slogan) மற்றும் சர்வதேச தர நியமங்களுடன் ஒத்திசையக்கூடிய வகையிலான பொதி மாதிரி அமைப்பொன்றை தயார் செய்வதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வர்த்தகக் குறியீடு மற்றும் சுலோகத்தைப் பதிவுசெய்யும் நடவடிக்கைக்காக புதிய ஆவணங்கள் தற்போது தேசிய புலமைச்சொத்து அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**<u>1972 இன் 11 ஆம் இலக்க, அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையின் (ஈ) பந்தி.</u>**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவின் கீழும் கொள்ளப்படுகின்ற தகவல்கள் முறையாக ஒன்று திரட்டப்படாமை காரணமாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற தகவல் கோரல்களுக்கு முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க முடியாது போயுள்ளது. இந்தப் பலவீனத்தை இனங்கண்டுள்ள விடயப்பொறுப்பு அமைச்சான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து தகல்களை ஒன்று திரட்டி வலயமைப்பாக மாற்றும் நடடிவக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் உரிய மாவட்டச் செயலகங்கள், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கைக் கட்டளைகள் நிருவகத்துடன் நிறுவன மட்டத்தில் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிறுவனங்களுடன் தகவல்களைப் பரிமாற்றிக்கொண்டு விடயப்பொறுப்பு அமைச்சின் கண்காணிப்பின்கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றில் இந்தக் கூட்டுத்தாபனம் தொடர்புபட்டுள்ளது.

**1972 இன் 11 ஆம் இலக்க, அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையின் (ஊ) பந்தி.**

சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கு சர்வதேச வகைப்படுத்தல்கள் மற்றும் தர நியமத் தேய்வு ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தற்போது பெரும்பாலானவற்றை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கு முன்னரும் குறிப்பிடப்பட்டவாறு வர்த்தகக் குறியீடு மற்றும் சுலோகம் மற்றும் சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கியவாறான பொதியிடல் மாதிரி அமைப்பு கூட்டுத்தாபனத்தினால் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், பதனிடலுக்கான தர நியமங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தயார் செய்வதற்கான யோசனைகளும் கருத்திட்ட அறிக்கைகளும் விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடயப்பொறுப்பு அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய தற்போது இந்தக் கூட்டுத்தாபனத்தினால் அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**1972 இன் 11 ஆம் இலக்க, அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையின் (ஏ) பந்தி.**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை நாடு முழுவதும் விஸ்தரிப்பதாகும். அதற்காக அரசாங்க விவசாய நிவாரண உதவிக் கொள்கையின் கீழ் விடயப்பொறுப்பு அமைச்சின்மூலம் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம், மரமுந்திரிகை விவசாய ஏற்றுமதிக் கிராமக் கருத்திட்டம் மூலம் இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான நாற்றுமேடைகளில் உரிய நடைமுறைகளைப் பற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற உயர் தரத்தைக் கொண்ட ஒட்டு மற்றும் விதை மரமுந்திரிகைச் செடிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றி மரமுந்திரிகைச் செடிகளை நாட்டுவது தொடர்பாக தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலமும் இந்த மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை விபரிக்கும் பணிக்கு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் முனைப்புடன் பங்களிப்பு வழங்கி வருகின்றது. இதற்கு மேலதிகமாக Dilma Conservation போன்ற நிலைபேறான விவசாய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தைக்

கொண்டுள்ள நிறுவனங்களுடன் இணைந்து மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரண விலையில் மரமுந்திரிகைச் செடிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் இலவசமாக நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொடுப்பது இந்தக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.3 (ஆ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கூட்டுத்தாபன அலுவலர்களை உள்ளடக்கிய குழுவினால் தற்போது இதில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களைக் கணக்கீடுகள் செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்கமைய கூடிய விரைவில் குறித்த செலவினங்களை மதிப்பீடு செய்யும் முறையியல் பூர்த்தி செய்யப்பட்டு அதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டு அடுத்து வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுகளைத் தயார் செய்யும்போது குறித்த முறையியல்களைப் பயன்படுத்திக்கொண்டு இறுதி இருப்புகளின் பெறுமதிகளைக் கணிப்பீடு செய்து மேற்படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (ஈ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த கூட்டுத்தாபனத்தைத் தாபிக்கும்போது அதற்கு ஏற்புடையதான அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தைத் தாபிக்கும் நோக்கங்களுக்கு அமைய மரமுந்திரிகைப் பருப்பு மற்றும் மரமுந்திரிகைச் செடி விற்பனை செய்வது போன்ற வணிக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நாட்டில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை விஸ்தரித்தல் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் பொதுவாக மரமுந்திரிகை பயிர்ச்செய்கையின் நடவடிக்கைகளில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு அமுல்படுத்த வேண்டிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற சேவைசார் செயற்பாடுகள் தொடர்பிலான பொறுப்பும் கூட்டுத்தாபனத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சேவைசார் செயற்பாடுகளாக அமுல்படுத்தப்படுகின்ற விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகளுக்கு தனியான வருமானம் மற்றும் செலவின கணக்குத் தயார் செய்யப்படுவதில்லை என்பதுடன், வருடாந்த மேற்படி செலவினம் நிலையங்களுக்கு ஏற்புடைய பொருட்கள்சார் பெறுமதியைக் கொண்ட செலவினமும் கூட்டுத்தாபனத்தின் வணிகச் செயற்பாடுகளுக்கான

இலாபங்கள் நிலையங்களுக்கான செலவினங்களுடன் இணைக்கப்பட்டு கணக்குகளில் பதிவுசெய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபன சேவைசார் செயற்பாடுகள் சம்பந்தமான செலவினம் மேலே குறிப்பிடப்பட்டவாறு கணக்குகள் பதிவுசெய்யப்படுகின்ற போதிலும் மேற்படி சேவைகளை வழங்குவதன் மூலம் பொதுவாக பொருளாதாரத்துக்கு உரித்தாகும் பயன்கள் நிதிசார் பெறுமதியில் அளவிட முடியாது உள்ளதனால் அவற்றை கணக்குகளில் பதிவுசெய்ய முடியாமை காரணமாக இந்தக் கணக்காய்வு அவதானிப்பில் மேற்படி நிலைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவது முக்கியம் என்பதைக் குறிப்பிட வேண்டும். எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் விற்பனை மற்றும் ஏனைய வருமானங்களைத் தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டு செலவினங்களை முறையாக முகாமைத்துவம் செய்து இலாபகரமான தன்மையை வளர்த்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தீவிரக் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ரூபா. மில்லியன் 14.471 ஆன தேசிய இலாபத்தை அடைந்திருப்பதன் மூலம் இது தெளிவாகின்றது. அதற்கமைய உரிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.3 (உ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு இலங்கை வங்கியின் இரண்டு நடைமுறைக் கணக்குகள் (இலக்கம; 1633704 மற்றும் 1633705 ஆகிய நடைமுறைக் கணக்குகள்) மற்றும் இலங்கை வங்கியின் ஒரு சேமிப்புக் கணக்கு (இலக்கம் 1649789 ஆம் இலக்க சேமிப்புக் கணக்கு) தவிர, கூட்டுத்தாபனத்தின் எஞ்சிய அனைத்து அநாவசியமான கணக்குகளையும் மூடிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.3 (ஊ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,807,121 ஆன தவணைப் பணம் அனைத்தும் ஏற்கனவே உரிய சங்கங்களுக்கு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந்த நிலைமை எழுந்ததுடன், எவ்வாறாயினும் எதிர்காலத்தில் சம்பளத்தில் இருந்து மேற்கொள்ளும் குறைத்துக்கொள்ளும் தொகைகள் குறித்த சந்தர்ப்பத்திலேயே உரிய சங்கங்களுக்கு அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

2.3 (எ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 3,954,338 ஆன மொத்த மருத்துவ உதவித் தொகையும் ஏற்கனவே உரிய பதவியணி உறுப்பினர்களுக்குச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3 (ஏ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த விரிவான கணக்காய்வு அறிக்கையில் இலக்கம் 1.2 *(ஏ)* இன்கீழ் இதற்கு முன்னர் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 9>466>200 ஆன கடன்தொகைக்கு எதிராக இந்த நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்த வேண்டியதாக உள்ள ரூபா 3,500,000 ஆன கடன் தொகையை ஈடுசெய்வதற்கு அரசாங்க பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரப்பட்ட போதும் அதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

அதற்கமைய இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச கடனை அறவிட்டுக்கொள்வது தொடர்பான நிதி, பொருளாதார உறுதிப்பாடு, தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தக்கு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய பதிலுக்கமைய, இந்த நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்தவேண்டியுள்ள கடன் பெறுமதியைச் செலுத்தி விடுவிக்க வேண்டிய முறை தொடர்பான தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

2.3 (ஐ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதற்கு முன்னர் இந்த பதிலறிக்கையில் இலக்கம் 2.2.2 *(இ)* இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கமைய இந்தக் கூட்டுத்தாபனத்தக்கு உரித்தான மொத்த காணிகளின் ஏக்கர் அளவான 11,223 ஏக்கர்களில் 80 % (8988/11223*100) இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாகி இருப்பது 2012 ஆம் ஆண்டின் பின்னராகும்.

மேற்படி மொத்த 11,223 ஏக்கர் காணிகளில் மன்னார் கொண்டச்சி தோட்டம் மற்றும் மட்டக்களப்பு மாங்கேணித் தோட்டம் ஆகிய காணிகளில் இருந்து சிவில் பாதுகாப்பு படையினருக்கு மரமுந்திரிகைப் பயிர்ச்செய்ப்பட்டுள்ள *1,600* ஏக்கர் நிலப்பகுதியிகள் வெற்றிகரமாக மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மொத்த ஏக்கர் அளவான காணிகளில்

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ள முடியாத 552 ஏக்கர் பிரதேசமும் உள்ளடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் உள்ள காணிகளில் புதிய மரமுந்திரகைப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனம் உழைத்துள்ள நிதியைப் பயன்படுத்துவதுடன், அதன்படி மேற்படி உழைப்புகளுக்கு ஏற்ப வருடாந்தம் தோட்டங்களில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் இது மிகச் சிறியளவான ஏக்கர்களில் மாத்திரமாகும். அதற்கமைய காணப்படுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கமைய முடியுமான உச்சளவில் கூட்டுத்தாபனத் தோட்டங்களில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு உரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பழைய பயிர்ச்செய்கைகளைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளும் (அதாவது, மீள்பயிர்ச்செய்கை மற்றும் உப பயிர்ச்செய்கை) மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய நடப்பாண்டில் (அதாவது, *2024*ஆம் ஆண்டில்) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான எளுவன்குளம் தோட்டம் மற்றும் திரியாய தோட்டங்களில் முறையே *100* ஏக்கர் மற்றும் 05 ஏக்கர் நிலப்பகுதியிகளில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறே உப பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக தனியார் துறையின் பெருந்தோட்டக்காரர்களுக்கு காணியைக் குத்தகைக்கு வழங்குவதன்மூலம் அவர்களின் உதவியைப் பெற்றுக்கொண்டு தோட்டங்களில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதுடன், பயிர்ச்செய்கைக்கு ஊக்கம் கொண்டுள்ள தனியார்த்துறை முதலீட்டாளர்களுடன் முறையானவாறு உடன்படிக்கைகளைச் செய்து அவர்களின் நிதியைப் பயன்படுத்தி புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான திட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன.

2.3 (ஓ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கூட்டுத்தாபனத்தின் பெரும்பாலான தோட்டங்களில் மிகப் பழைமை வாய்ந்த மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை காணப்படுவதுடன், மேற்படி பயிர்ச்செய்கை நிலங்களில் காணப்படுகின்ற மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை நியம மரமுந்திரிகை எண்ணிக்கையிலும் பார்க்க மிகவும் குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளன. மேலும், காட்டு யானைகளின் அழிப்பு, மரக்குற்றி மற்றும் அதன் வேர்களை பாதிக்கின்ற பூச்சிகளின் பாதிப்புக்கள் போன்ற காரணங்களினால் ஓர் ஏக்கருக்குக் காணப்பட வேண்டிய மரமுந்திரிகையின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளது.

அவ்வாறே 2022 ஆம் ஆண்டில் தோலுடனான மரமுந்திரிகை அறுவடை காலத்தில் காணப்பட்ட மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கான பாதகமான காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் காரணமாகவும் முழு நாட்டிலும் தோலுடனான மரமுந்திரிகை அறுவடை கீழ்மட்டத்தில் காணப்பட்டதையும் குறிப்பிடல் வேண்டும். மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் சிறந்த காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் நிலவிய 2020 ஆம் ஆண்டில் இந்தக் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தோலுடனான மரமுந்திரிகை அறுவடைக்கமைய விளைச்சலானது ஒரு மரமுந்திரிகை மரத்துக்கு சராசரி 5.043 கிலோகிராமை அண்மித்த பெறுமதியில் காணப்பட்டதென்பதையும் குறிப்பிட வேண்டும்.

2.3 (ஓ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலைமைகள் காரணமாக மற்றும் கூட்டுத்தாபனத்தின் சீரற்ற நிதி நிலைமைக்கு அமைய கடந்த 5 வருட காலப்பகுதி முழுவதிலும் தென்னைப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான இரசாயன உரம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனால் தென்னை அறுவடை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளமை இந்த கணக்காய்வு அவதானிப்பின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துக்கான காரணமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும் நடப்பாண்டில் (அதாவது, 2024 ஆம் ஆண்டு) தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உரம் கொள்வனவு செய்யத் தேவையான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் தென்னை அறுவடை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடையுமென எதிர்பாக்க முடியும்.

2.3 (ஔ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கூட்டுத்தாபனம் நீண்டகாலமாக மரமுந்திரிகை பழத்திலிருந்து ‘வைன்’ உற்பத்தி செய்து விற்பனை செய்து வருவதுடன், அதற்கமைய மரமுந்திரிகை பழம்மூலமான ‘வைன்’களில் இருந்து உப உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் மேற்படி உப உற்பத்திகளை விற்பனை செய்வதற்கும் இந்தக் கூட்டுத்தாபனம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பொதுவாகத் தோலுடனான மரமுந்திரிகையைச் சேகரித்துக்கொள்வது இடம்பெறுவது மேற்படி தோலுடனான மரமுந்திரிகை உள்ள பழங்கள் மரத்திலிருந்து நிலத்தில் வீழ்ந்த பின்னராகும் என்பதனால் அதுவரை மரமுந்திரிகை பழங்கள் தோலுடனான மரமுந்திரிகைப் பழத்திலிருந்து இவற்றை

நீக்க முடியாதிருப்பதனால் மரமுந்திரிகை மரத்திலிருந்து நேரடியாக மரமுந்திரிகைப் பழங்களை பறித்து உப உற்பத்திகளுக்குப் பயன்படுத்தக்கொள்ளும் ஆற்றல் இல்லை என்பதுடன், அதற்கமைய மரமுந்திரிகை பழங்களை புத்தம் புதிய நிலையில் உரிய வணிக உற்பத்திகளுக்குப் பயன்படுத்திக்கொள்வது சிக்கலாக உள்ளது. மேலும் மரமுந்திரிகை மரத்திலேயே குறிப்பிடத்தக்களவான மரமுந்திரிகை பழங்கள் அழிவடைவதனால் தோலுடனான மரமுந்திரிகை அறுவடை காணப்படுகின்ற காலப்பகுதியில் அந்தப் பழங்களின் எண்ணிக்கைக்கமைய சேகரிக்கப்படுகின்ற மரமுந்திரிகைப் பழங்களின் அளவைக் கணிப்பிடுவது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

'வைன்' உற்பத்தி தொடர்பில் எழுந்துள்ள தொழில்நுட்ப சிக்கல் காரணமாக தற்போது கூட்டுத்தாபனத்தில் 'வைன்' உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், மரமுந்திரிகைப் பழங்களைப் பயன்படுத்திக்கொண்டு எத்தில் அல்ககோல் அல்லது 'ஸ்பிரிட்' உற்பத்தி செய்யும ஆற்றல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனை நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன. அதற்கமைய இந்த எத்தில் அல்ககோல் ஆராய்ச்சி மட்டத்தில் இருந்து உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஐ.டீ.எல். நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிறுவனத்தினால் தற்போது குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த உற்பத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கமைய எதிர்காலத்தில் வணிக மட்டத்தில் எத்தில் அல்ககோல் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் ஆற்றல் உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நெதகமுவ பதனிடல் நிலையத்தில் காணப்படுகின்ற மரமுந்திரிகை தோல்மூலமான எண்ணெய் அல்லது திரவம் உற்பத்தி செய்யும் இயந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு தோல் மூலமான எண்ணெய் / திரவம் மாதிரிகள் உற்பத்தி செய்யப்பட்டு அவை மொத்தமாக விற்பனை செய்வதற்கு நிறுவனமொன்றை தேடிப்பெற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தினால் இந்த மரமுந்திரிகை தோல் பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதனால் அதன்மூலம் கூட்டுத்தாபனத்துக்கு வருமானம் உழைக்கப்படுகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

2.3 (க) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

அவசர புதுப்பித்தல் நடவடிக்கைகளின்போது கூட்டுத்தாபன வாகனங்களை புதுப்பிக்கும் முறையியலுக்கமைய கூட்டுத்தாபன வாகனங்கள் ‘கராஜ்’களுக்கு அனுப்பப்படுவதுடன், திடீரென ‘கராஜ்’களுக்கு அனுப்பப்படுகின்ற வாகனங்களின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான பெருகை நடவடிக்கைகளை முறையாகப் பூர்த்தி செய்யும்வரை அந்த வாகனங்கள் குறிப்பிடத்தக்களவு காலப்பகுதிக்கு ‘கராஜ்’களிலே நிறுத்திவைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எவ்வாறாயினும் வாகனங்களைப் புதுப்பிக்கும் முறையியலை முறையாகப் பின்பற்றி கூடிய விரைவில் உரிய புதுப்பித்தல்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.3 (ங) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. மில்லியன் 7.092 ஆன பெறுமதியில் பிரதானமாக மரமுந்திரிகை பொயிலர், மரமுந்திரிகை பதனிடல் இயந்திரம் மற்றும் மரமுந்திரிகை கலவை இயந்திரங்கள் 2 காணப்பட்டதுடன், இவற்றைக் கூட்டுத்தாபனத்தினால் கட்டளையிடப்பட்டு இருப்பது மரமுந்திரிகைப் பதனிடல் இயந்திரம் மற்றும் மரமுந்திரிகை கலவை இயந்திரம் 2 மாத்திரமாகும். குறித்த காலப்பகுதிக்குள் நாட்டில் நிலவிய பணவீக்க நிலைமை காரணமாக மேற்படி மரமுந்திரிகைக் கலவை இயந்திரத்தை வழங்க முடியவில்லை என்று வழங்குநரான சகேஷ் இன்டஸ்ரிஸ் நிறுவனம் அறியத்தந்துள்ளதனால் கூட்டுத்தாபனத்துக்கு குறித்த வழங்குநருக்கு மரமுந்திரிகை பதனிடல் இயந்திரம் மாத்திரமே கையளிக்கப்பட்டது.

மேற்படி பதனிடல் இயந்திரத்தை இயக்குவது சம்பந்தமாக நிலவிய சிக்கலான நிலைமைக்கு மத்தியில் அதனைப் பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது தாமதமடைந்துள்ளதுடன், குறித்த வழங்குநர் அந்த இயந்திரத்துக்கான கொடுப்பனவுகளைக் கோரியபோது இயந்திரத்தின் செயற்பாடு பற்றி நிலவிய சிக்கல்களை அவர் பல சந்தர்ப்பங்களில் தீர்த்துவைத்துள்ளார். பின்னர் குறித்த இயந்திரத்தின் செயற்பாடு தொடர்பாக பரிசோதனை செய்தவற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின் பெயரில் இயந்திரத்தின் கொள்வனவு விலையின் 10% பெறுமதியைத் தடுத்துவைத்துக்கொண்டு குறித்த கொடுப்பனவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் இயந்திரத்தைப் பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த ஆரம்பித்த முதல் சந்தர்ப்பத்திலேயே 15 நிமிடங்களின் பின்னரும் இரண்டாம் சந்தர்ப்பத்திலும் 2 மணித்தியாலங்களின் பின்னரும் மீண்டும் இயந்திரத்தின் செயற்பாடு தடைப்பட்டதுடன், இதன் பின்னர் அதனைப் பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இந்தச் சிக்கலான நிலைமைகள் பற்றி உரிய வழங்குநருக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தி குறித்த இயந்திரத்தை மீண்டும் இயங்கும் நிலைக்கு சீர்செய்து தருமாறு கோரிக்கைவிடுக்கப்பட்ட போதிலும் அவர் எந்தவொரு பதிலும் அளிக்கவில்லை.

அவ்வாறே மேற்படி இயந்திரம் சம்பந்தமாக விற்பனைக்குப் பின்னரான சேவை வழங்குவது தொடர்பான உடன்படிக்கையை செய்துகொள்ள முன்வருமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்டபோதிலும் அவர் அவ்வனைத்துச் சந்தர்ப்பங்களிலிருந்தும் விலகிச் சென்றுள்ளார்.

இந்த நிலைக்கு மத்தியில் கூட்டுத்தாபனம் குறித்த இயந்திரத்தை பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது போனதன்மூலம் நட்டம் ஏற்பட்டுள்ளமை மற்றும் மேற்படி இயந்திரத்தின் பயன்பாடு குறைந்துள்ளமை ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி வழங்குநருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு குறித்த ஆவணக்கோப்புகள் விடயப்பொறுப்பு அமைச்சின் சட்ட அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது தமது சேவை பெறுநருக்கு நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ள பொறுப்புக்களைப் புறக்கணித்தமை தொடர்பான விடயங்களை அறிவிக்குமாறு அமைச்சின் சட்ட அலுவலர் மேற்படி வழங்குநருக்கு எழுத்துமூலம் அறிவிப்புச் செய்ததுடன், அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு சட்ட அலுவலர் மேலும் அறிவுரை வழங்கியுள்ளார். அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலே குறிப்பிடப்பட்ட 10 சதவீதமான தடுத்துவைக்கப்பட்டுள்ள தொகையைச் செலுத்துவதும் இடைநிறுத்தப்பட்டது.

இதனையடுத்து, மேற்படி இயந்திரத்தை மீண்டும் செயற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்காக மரமுந்திரிகை வெட்டும் இயந்திரம் உற்பத்தி செய்வது தொடர்பில் 'போடன்' உரிமப்பத்திரம் பெற்றுள்ள மரமுந்திரிகைப் பதனிடல் இயந்திர உற்பத்தியின் முன்னோடி நிறுவனம் ஒன்றான புத்தி இன்டஸ்ரிஸ் நிறுவனத்திடமிருந்து குறித்த புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கான செலவின மதிப்பீடு கோரப்பட்டதுடன், மேற்படி நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்கள் அந்த இயந்திரத்தை பௌதிக ரீதியாகப் பரிசீலித்து, அதனை மீண்டும்

பயன்படுத்தக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக ரூபா. மில்லியன் 04 ஆன மதிப்பீடொன்றை சமர்ப்பித்துள்ளார்கள்.

அதற்கமைய தற்போது மேற்படி பதனிடல் இயந்திரத்தை அத்தியாவசியமானதென இனங்காணப்பட்டுள்ள மரமுந்திரிகைகளை வெட்டுதற்குப் பயன்படுத்தும் இயந்திரப் பகுதி பிரதானமாக இயந்திரப் பகுதியை பிரதானமாக புதுப்பித்துக்கொள்ள இந்தக் கூட்டுத்தாபனம் எதிர்பார்த்துள்ளதுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப வழங்குநருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 (ச) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் பொயிலர் மிகவும் பழைமை வாய்ந்ததாக உள்ள போதிலும் அந்த இயந்திரங்களை அடிக்கடி புதுப்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களாகும் என்பதுடன், பல்வேறு நடைமுறையின் அடிப்படையினால் இவற்றில் ஒரு சில புதுப்பித்தல் நடவடிக்கைகளில் ஒரு சில தாமதங்களும் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இது தொடர்பான விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மரமுந்திரிகைத் தோல் மூலம் எண்ணெய் உற்பத்திக்கு இப்பொழுது சந்தையில் கேள்வி இல்லாமை காரணமாக இந்த மரமுந்திரிகைத் தோலிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் பயன்டுத்தப்படுவதில்லை என்பதுடன், எவ்வாறாயினும் எதிர்காலத்தில் சந்தைக்காரணிகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் தேவைக்கமைய சேவைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த இயந்திரத்தை மீண்டும் குறித்த உற்பத்திக்குப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் உள்ளது.

2.3 (ஞ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

நெதகமுவ பதனிடல் நிலையத்தில் சரேஷ்ட பொறுப்பு அலுவலரின் கோரிக்கைக்கு அமைய மற்றும் பிற்காலத்தில் உருவான நிலைமையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நெதகமுவ பதனிடல் நிலையத்தின் பொயிலரை புதுப்பிப்பதற்கு விலை மனுக் கோருவதற்கு பகிரங்க பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன், அதற்கமைய ஒரு விலை மனு மாத்திரம் கிடைத்துள்ளது. கிடைத்த விலை மனுவும் மிகவும் உச்சப் பெறுமானத்தைக் கொண்டிருந்ததனால் கூட்டுத்தாபனத்தில் அப்போது

காணப்பட்ட ஏற்பாடுகளின் நிலைமைக்கு அமைய மேற்படி புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தக் கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொயிலர் மூலம் தோலுடனான மரமுந்திரிகையை அவித்தல் மேற்கொண்டு மேற்படி தோலுடனான மரமுந்திரிகைப் பதனிடப்பட்ட பின்னர் முழுமையான மரமுந்திரிகைப் பருப்பு விகிதம் அதிகரிப்பது நன்மை பயப்பதாக உள்ளபோதிலும் மரமுந்திரிகை பருப்பின் சாதாரண சுவையைவிட, அதன் சுவை ஓரளவு குறைவடைவது மரமுந்திரிகைப் பருப்பை நீண்டகாலம் வைத்திருக்கும் கால எல்லை ஓரளவுக்கு குறைவடைவது போன்ற மரமுந்திரிகை விற்பனையில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவதும் அதன் காரணமாக உருவாகின்றது.

கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் அதனைக் கொள்வனவு செய்தவற்கான முக்கிய காரணம் ஏனைய மரமுந்திரிகை உற்பத்தியாளர்களின் மரமுந்திரிகையுடன் விடும்போது கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகையின் சுவை குறிப்பிடத்தக்களவு உயர் மட்டத்தில் காணப்படுவதாகும் என்பதுடன், மேற்படி கேள்விக்குப் பொருத்தமானவாறு மரமுந்திரிகை பருப்பு உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்பதனால், தற்போது பதனிடல் நடவடிக்கைகளுக்காக பொயிலர் பயன்படுத்திக்கொள்வதில்லை என்பதுடன், மேற்படி பாதகமான நிலைமையைக் கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் அல்லது அதனைக் கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகளுக்காக தோலுடனான மரமுந்திரிகையை அவிப்பதற்கு பொயிலரை மீண்டும் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

2.3 (ட) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக அதற்கு முன்னர் அடிக்கடி கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளுக்கு வைக்கப்பட்ட விளங்கங்களுக்கு மேலதிகமாக பின்வரும் கருத்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

மரமுந்திரிகைத் துறையில் காணப்படுகின்ற ஒரே அரச துறை நிறுவனம் என்ற வகையில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு நாட்டில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை, மரமுந்திரிகை விஸ்தரித்தல், மரமுந்திரிகை பதனிடல், மரமுந்திரிகையைப் பற்றி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மரமுந்திரிகை விற்பனை போன்ற பல துறைகளைப் பிரநிதித்துவம் செய்யும்

வகையில் அவை சம்பந்தமான பணிகளில் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி பொறுப்பளிக்கப்பட்டள்ளது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் பரவிய 'கொவிட் – 19' தொற்றுநோய் காரணமாக தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் மரமுந்திரிகைத் துறையைச் சேர்ந்த பயிர்ச்செய்கையாளர்கள், பதனிடுபவர்கள், விற்பனை செய்பவர்கள் என்ற வகையில் பெரும் திரளானவர்கள் வருமான வாய்ப்புக்களை இழந்திருந்தார்கள் என்பதுடன், அவ்வாறு பொருளாதார ரீதியாக அசௌகரியமான நிலைமைக்கு தள்ளப்பட்ட மரமுந்திரிகைத் துறையை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஆட்களை அந்த நிலைமையில் இருந்து விடுவித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பளிக்கப்பட்டு இருப்பதனால், இந்த நிலைமைக்குத் தீர்வு வழங்குவதற்காக அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இந்தக் கூட்டுத்தாபனத்தில் அப்போது இருந்த தவிசாளரின் கோரிக்கைக்கு அமைய மற்றும் அப்போதைய விடயப்பொறுப்புக்கான கௌரவ இராஜாங்க அமைச்சரினால் கூட்டுத்தாபனத்தின் பதனிடல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு செய்யும் விஜயங்களின் போது மேற்கொண்ட அவதானிப்புக்களின் பொறுபேறாக கூட்டுத்தாபனத்துக்கு மற்றும் மரமுந்திரிகைத் துறையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பதனிடுபவர்களுக்குப் பொதுவாக நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்கு அடிப்படையாக அமைந்துள்ள மரமுந்திரிகை பொதியிடல் இயந்திரம் மற்றும் மேலும் மரமுந்திரிகைப் பதனிடல் இயந்திரக் கட்டமைப்பை (பதனிடல் இயந்திரக் கட்டமைப்புத் தொடர்பாக எந்தக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் 2.3 (க) இன்கீழ் கணக்காய்வு அவதானிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) கொள்வனவு செய்யத் தேவையான நிதி ஏற்பாடுகள் விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சினால் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகைப் பதனிடல் நடவடிக்கைகளின் இரு நடவடிக்கைகளில் இறுதிப் பெறுமதிசேர்க்கும் நடவடிக்கைகள் மற்றும் இறுதி பொதியிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நெதகமுவ பதனிடல் நிலையத்திலாகும் என்பதனால், மரமுந்திரிகை பொதியிடல் இயந்திரத்தை அந்த வளவில் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மரமுந்திரிகை பதனிடல் இயந்திரக் கட்டமைப்பும் நெதகமுவ பதனிடல் நிலையத்தில் தாபிக்கப்பட முடியுமான எனும் இத்துறையில் உள்ள ஆட்களுக்கு கூடுதல் பயன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நாட்டில் மரமுந்திரிகை கைத்தொழில் நடவடிக்கைகள் கூடுதலாக வியாபித்துள்ள புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுத்தர்பனத்தின் பதனிடல் நிலையத்தில் அந்த மரமுந்திரிகை பதனிடல் இயந்திரக் கட்டமைப்பு தாபிக்கப்பட்டது.

மேலும் 2020 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் முன்வைக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத்துக்கு அமைய அப்போதைய விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சினால் மன்னார், கொண்டச்சித் தோட்டத்தின் மீளத்தாபித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா. மில்லியன் 225 ஆன ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுத் தரப்பட்டுள்ளதுடன், மேற்படி ரூபா. மில்லியன் 225 ஆன ஏற்பாடுகளில் ரூபா. மில்லியன் 125 கொண்ட கொண்டச்சித் தோட்டத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான கருத்திட்டத்தின்கீழ் 1,000 ஏக்கர்கள் நிலப் பிரதேசத்தில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல், ஏனைய அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 3 வருட காலப்பகுதிக்குள் மேற்படி 1,000 ஏக்கர் நிலப்பகுதிக்குள்ளும் படிப்படியாக புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடையின் அளவு தொடர்பாக எதிர்வுகூறலும் முன்வைக்கப்பட்டு உயர் வினைத்திறனைக் கொண்டதாக மேற்படி தோலுடனான மரமுந்திரகை உற்பத்திகளின் பதனிடல் நடவடிக்கைகளை பேணிவரத் தேவையான பதனிடல் மற்றும் பொதியிடல் இயந்திரங்களின் அவசியத்தன்மையையும் இந்தக் கொள்வனவுகளின்போது கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ‘Covid – 19’ தொற்றுநோய் நிலைமை நீண்டகாலம் நாடு முழுவதிலும் பரவியிருந்தமை மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி நிலைமை காரணமாக மேற்படி புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளின் நடவடிக்கைகளை முறையாகப் பூர்த்திசெய்ய முடியவில்லை என்பதுடன், அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்டவாறு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்ட உற்பத்திக் கொள்ளளவை அடைந்துகொள்ள முடியவில்லை. இதற்கமைய குறித்த பொதியிடல் இயந்திரம் கூட்டுத்தாபனத்தில் தற்போது மரமுந்திரிகை உற்பத்திக் கொள்ளளவுக்குப் பொருத்தமானவையாக இல்லாமையினால் மேற்படி பொதியிடல் இயந்திரத்தை முறையான பெறுகை முறைகளைப் பயன்படுத்தி உச்சளவான சந்தை விலைக்கு விற்பனை செய்து அந்த நிதியில் இருந்து கூட்டுத்தாபனத்தின் தற்போதைய உற்பத்திக் கொள்ளளவுக்கு பொருத்தமான புதிய பொதியிடல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்துகொள்ள அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்துக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.3 (ண) *பின்வருமாறு* விளக்கமளிக்கின்றேன்.

நெதகமுவ பதனிடல் நிலையம் மிகப் பழைமைவாய்ந்த கட்டிடம் ஒன்றில் பேணிவருவதுடன், இதற்குரிய காணி கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்தபோது அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமாகும். கட்டிடம் மிகவும் பழைமைவாயந்து உள்ளதனால் கூட்டுத்தாபனத்தின் பதனிடல் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு மேற்படி கட்டிடத்தை நவீனமயப்படுத்திக் கொள்வது மிகவும் கடினமான பணியாக இருந்ததுடன், குறித்த பழைமையான கட்டிடத்தை அகற்றி அதற்குப் பதிலாக பதனிடல் நிலையத்துக்கு புதிய கட்டிடம் நிர்மாணிப்பதன் மூலம் இந்தச் சிக்கலான நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியுமெனினும் அதற்குப் போதுமான நிதி ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்திடம் இல்லை.

அதற்கமைய அடிக்கடி இங்கு குறிப்பிடப்பட்ட களஞ்சியக் கட்டிடம் மற்றும் ஏனைய கட்டிடங்களின் பகுதிகளில் மேற்கொள்ளக்கூடிய புதுப்பித்தல் நடவடிக்கைகள் மாத்திரம் செய்யப்பட்டு தடையின்றி பதனிடல் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. கூட்டுத்தாபன நிதி நிலைமை சீரான மட்டத்ததை அடைந்த பின்னர் இது தொடர்பில் அவசியமான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்பில் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் தோலுடனான மரமுந்திரிகை அறுவடையை பொதியிடுவதற்கு கயிறு மூலமான பொதிகள் அல்லது வலை மூலமான பொதிகளைப் பயன்படுத்திக்கொள்வது நடைமுறைக்குச் சாத்தியமானதாக இல்லாமைக்கான காரணம் மேற்படி கயிறுமூலமான பொதிகள், வலைமூலமான பொதிகள் இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு தாங்கிக்கொள்ள முடியாத உயர் மட்ட விலையைக் கொண்டு இருப்பதனால் ஆகும் என்பதுடன், மேலும் குறித்த கயிறு மூலமான பொதிகள் மிக விரைவில் சேதமடையக்கூடிதாகவும் குறித்த பொதியிடல் முறைமையியலுக்கு அமைய வளிமண்டலத்தில் நீர் ஆவியாகுவது நேரடியாக தோலுடனான மரமுந்திரிகை இருப்புகளுக்கு ஈர்க்கப்படுவதனால் இந்த தேர்லுடனான மரமுந்திரிகை இருப்பு பதனிடுதலுக்கு பயன்படுத்துவது கடினமானதாகவும் பொதியிடலுக்கு போதியளவு கயிறு மூலமான பொதிகள் அல்லது வலை பொதிகள் போதியளவில் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியாமையும் இதில் தாக்கம் செலுத்தியுள்ள முக்கிய காரணிகளாக குறிப்பிட முடியும். அதற்கமைய கூட்டுத்தாபனத்தினால் ஒப்பீட்டு ரீதியில் விலைகுறைவான பொலிசட் வகையைச் சேர்ந்த பொதிகள் தோலுடனான மரமுந்திரிகை இருப்புக்களைப் பொதியிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. மேலும் தோலுடனான மரமுந்திரிகை எண்ணெய் சார்ந்த ஓர் அம்சமாக இருப்பதனால் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியக்கூடிய கால எல்லை குறிப்பிடத்தக்களவு மாற்றமடைவதில்லை.

2.3 (த) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த அவதானிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொண்டச்சி தோட்டத்தில் மீளத் தாபிப்பதற்கு விடயப்பொறுப்பான அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள ரூபா மில்லியன் 225 ஆன முதலீடுகளில் 2024.02.29ஆம் திகதியளவில் குறித்த இலக்குசார் பணிகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக ரூ. மி. 106.598 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், இதற்கு மேலதிகமாக தற்போது பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வேலைகளுக்கான கொடுப்பனவு கடப்பாடுகள் ரூபா மில்லியன் 87.671 ஆகும். இதற்கமைய குறீத்த கருத்திட்டத்தின் சிக்கலான நிலைமைக்கு மாறியுள்ள கொண்டச்சித் தோட்டத்தில் சுற்றிவர மின்சார வேலி நிர்மாணிக்கும் வேலைகள் தவிர, ஏனைய இலக்கு அனைத்துப் பணிகளும் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், தோட்டத்தின் சகல நிர்மாண பணிகளையும் 2024.04.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2.3 (ந) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள சகல கட்டிடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய கட்டிடங்களிலும் எம்மாலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி நிர்மாண நவடிக்கைகளுக்கு சமாந்தரமாக குறித்த கட்டிடங்களில் வயரிங் செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், குறித்த கட்டிடங்களுக்கும் மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (ப) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் சந்தையில் குறித்த நிர்மாணப் பொருட்களின் விலைகள் மற்றும் வேலைக்குரிய பெறுமதி மிக மிக அதிகரித்துச் சென்றதனால் குறித்த நிர்மாணப்பணிகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்த நிலைமையை கவனத்திற்கொண்டு விடயப்பொறுப்பு அமைச்சிடமும் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு குறித்த கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான மேலதிக ஏற்பாடுகளை அமைச்சின் அங்கீகாரத்தின்கீழ் பெற்றுக்கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய இங்கு குறிப்பிடப்பட்ட நிர்மாணப்பணிகளை நிறைவு செய்வது தொடர்பாக தேவையான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

2.3 (ம) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த மரமுந்திரிகை மரங்களை கணக்கெடுக்கும் நடவடிக்கைகளில் ஆரம்ப கட்டமாக கூட்டுத்தாபனத்தின் கமன்தளுவத் தோட்டத்தில் உரிய கணக்கெடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அப்பணிகளின் போது பயன்படுத்திக்கொள்ள வேண்டிய தொழிலாளர், ஊழியம் மற்றும் மரங்களை அடையாளப்படுத்தும் வர்ணம் போன்றவற்றுக்கு மிகவும் அதிகமான செலவினத்தைத் தாக்கிக்கொள்ள வேண்டி ஏற்படுவதனால் அதற்காக மேலதிக நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்வது சிக்கலாக மாறியுள்ளது. அதற்கமைய கூடிய விரையில் மேலதிக ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு கணக்கொடுப்பு நடவடிக்கைகளை நிறைவுசெய்ய செயற்பட்டு வருவதுடன், பின்னர் அதன் அடிப்படையில் மரமுந்திரிகை மரங்களின் பதிவேட்டை தயார் செய்வதற்கான நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படும்.

*******

| 13. 05 வருட கணக்குகளின் பொழிப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | | | | | |
| | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
| **இலாப நட்டக் கணக்கு** | ரூ.(000) | ரூ.(000) | ரூ.(000) | ரூ.(000) | ரூ.(000) |
| தேறிய விற்பனை | 134,849 | 139,223 | 109,120 | 100,082 | 94,931 |
| விற்பனை செலவினம் | 83,472 | 99,661 | (72,190) | (67,857) | (61,023) |
| **மொத்த இலாபம்** | **51,377** | **39,562** | **36,930** | **32,225** | **33,908** |
| ஏனைய வருமானங்கள் | 69,390 | 42,727 | 43,300 | 48,343 | 10,544 |
| மீண்டெழும் கொடை | 77,500 | 64,800 | 60,000 | 60,000 | 15,077 |
| நிருவாகச் செலவினம் /ஏனைய செலவீனம் | (181,059) | (160,419) | (147,982) | (167,334) | (38,407) |
| தேய்மானம் | (2,736) | (3,082) | (3,134) | (3,420) | 539 |
| **வணிக நடவடிக்கைகளில் இருந்தான தேறிய இலாபம்** | **14,472** | **(16,412)** | **(10,886)** | **(30,186)** | **21,661** |
| **சேவை துறை – வருமானத்தை விஞ்சிய செலவினம்** | **-** | **-** | - | **-** | **(61,303)** |
| **ஆயுள் கணிப்பீடு (இலாப) /நட்டம்** | **2,232** | | | | |
| **தேறிய இலாபம் /நட்டம்** | **16,704** | **(16,412)** | **(10,886)** | **(30,186)** | **(39,642)** |
| **ஐந்தொகை** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 116,125 | 117,553 | 77,883 | 82,027 | 87,369 |
| அறுவடை பெறும் பயிர்ச்செய்கைக்கான பராமரிப்பு | 25,316 | 28,053 | 31,135 | 34,270 | 27,436 |
| அறுவடை பெறாத பயிர்ச்செய்கைக்கான பராமரிப்பு | 98,080 | 71,592 | 60,329 | 37,862 | 51,591 |
| மேற்கொண்டு வரும் மூலதன வேலை | 6,543 | 628 | 576 | 69 | - |
| ஏனைய சிறிய கருத்திட்டங்கள் | 588 | 6,363 | 122 | 675 | 523 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **246,652** | **224,189** | **170,045** | **154,903** | **166,919** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்பு | 76,770 | 90,952 | 64,467 | 38,264 | 20,222 |
| வர்த்தக கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டியவை | 31,801 | 47,390 | 18,474 | 21,207 | 17,484 |
| முற்பணம் மற்றும் முன்கொடுப்பனவு | 50,639 | 43,813 | 9,828 | 6,093 | 2,553 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 143,842 | 159,876 | 42,516 | 5,202 | 3,225 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **303,052** | **342,031** | **135,285** | **70,766** | **43,484** |
| | | | | | **70,766** |
| **மொத்த சொத்துக்கள்** | **549,704** | **566,220** | **305,330** | **225,669** | **210,403** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **உரிமையாண்மை** | | | | | |
| ஆரம்ப மூலதனம் | 40,000 | 40,000 | 40,000 | 40,000 | 40,000 |
| அரசாங்க கொடைகள் | 281,565 | 289,535 | 256,381 | 202,788 | 175,414 |
| ஏனைய தரப்பினர்களிடம் கிடைத்த கொடைகள் | 280,919 | 286,736 | 32,337 | 15,766 | 17,756 |
| மூலதன ஒதுக்கம் | 17,441 | 17,442 | 17,441 | 17,442 | 17,442 |
| இலாப நட்டக் கணக்கு | (152,058) | (167,065) | (149,638) | (141,197) | (110,011) |
| **மொத்த உரிமையாண்மை** | **467,867** | **466,648** | **196,521** | **134,799** | **140,601** |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | | | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஒதுக்கம் | 35,790 | 42,948 | 38,953 | 35,046 | 27,704 |
| நீண்ட காலக் கடன் | 3,500 | 3,500 | 3,500 | 3,500 | 3,500 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்பு** | **39,290** | **46,448** | **42,453** | **38,546** | **31,204** |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | | | |
| வணிகக் கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய அறவிடவேண்டியவை | 42,547 | 53,124 | 66,359 | 52,324 | 38,598 |
| **மொத்த நடைமுறைச் பொறுப்பு** | **42,547** | **53,124** | **66,359** | **52,324** | **38,598** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்பு** | **549,704** | **566,220** | **305,333** | **225,669** | **210,403** |
| தேறிய சொத்துக்களின் பயன்கள் % | 3.6% | (3.5%) | (64.36) | (59.7) | (28.2) |
| தேறிய இலாப விகிதம் | 12.4% | 11.8% | (9.98) | (30.2) | (41.8) |
| நடைமுறை விகிதம் | 7:1 | 0:3 | 2:01 | 1:4 | 1:1 |
| உடனடி சொத்து விகிதம் | 5:3 | 4:7 | 1:1 | 0:4 | 0:6 |
| **மொத்த வருமானத்துக்கான மொத்த செலவினம்** | 1:1 | ( 0.93) | (0.89) | (1.3) | (1:2) |